T04165
R001J06

General 28978 1973 4165

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கார்வண்ணமாலை

என்றுவழங்குகின்ற

# திருவரங்கச் சந்நிதிமுறை.

காவேரியின் மத்தியில் அரங்கமாநகரத்தில் வைகுண்
டவிமானத்தில் திருமகள் நிலமகள் சமேதரா
யும் விபீஷணாழ்வார் கவரிவீசவும் நாரத
மகாமுனிவர் யாழ்வாசிக்கவும் ஆயிரம்
பணாமுடியையுடைய சேஷசயன
த்தின்கண் அரிய நித்திரை
செய்கின்ற கார்வண்ண
சொரூபியாகிய

ஸ்ரீரங்கநாயகர் திருவருள்பெற்று
அரியக்குடியில் மடங்கட்டி வசிக்கின்ற
நமசிவாயநாவலர்பாடியதை

---

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் & சன்ஸ்

அவர்களாற்றமது

பூமகள்விலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1913.

தாண்டவராயப்பிள்ளைவீதி 24-வது, நெ. வீடு.

கடவுள்துணை.

# அவையடக்கம்.

ஜெயமாருவாழ மெழுவகைத்தோற்றமுஞ் சித்திரத்தில்
நயமாயெழுதத் துணிந்ததைப்போலரி நாரணன்மேற்
சயமாயுரைத்த துதித்தவின்மாலையைத் தொல்லுலகிற்
றயவாய்ப்பரிந்தருண் மேலோர்திருவடித் தாட்டுணையே.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும்வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக்கரையும்-வடதிசையில்
வளநாட்டுப்பண்ணை யிருபத்துநாற்காதஞ்
சோளநாட்டெல்லையெனச்சொல்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட சோழவளநாட்டுக்குள்ளான புதுக்கோட்டையென்னுஞ் சமஸ்தானத்தில் சற்றேறக்குறைய (௬) வருடத்துக்குள்ளாக பிரதானிக்கஞ்செய்திருந்த தக்ஷணத்து வேளாளன்குலத்திலகராகியும், சிவபூசை சிவார்ச்சனை சிவபக்திசிவனடியார் நேசவிசுவாசஞ் சிறந்தவராகியும், விளங்காநின்ற ஸ்ரீமதுவைகுந்தம்பிள்ளையினுடைய நல்வினைப்பயனால் மிகுந்தசந்ததியான தானப்பிள்ளையினது மரபிற்றோன்றிய பொன்னம்பலம்பிள்ளையின் நன்னயபுத்திரராயும், ஸ்ரீரங்கநாதருடைய அனுக்கிரகம்பெற்று (௬௰) வயதுசென்று இப்போது அரியக்குடியில் மடங்கட்டி அந்தமடத்தில் வசிக்கின்ற சுத்தப்பிரமச் சைதன்யமுடைய நமச்சிவாயனென்னும் நற்பெயர்பூண்ட நாவலன்பாடிய இத்திருவரங்கச் சந்நிதிமுறையை யாவரு மெளிதினுணரும்பொருட்டு களத்தூர்-தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார் குமாரர் ஆறுமுகமுதலியாரால் பிழையறப் பரிசோதித்து நிறைவேறியது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# கார்வண்ணமாலை.

4165

## காப்பு.

சீர்மேவியராம கதைதனைமுப்பது செந்தமிழால்
பார்மேல்விலங்கவிக் கார்வண்ணமாலைப் பதுவல்சொல்ல
தார்மேரு வில்வாங்கியசக்கர சக்தியருள்
கார்மேனியைங்கர மும்மதத்தோன்பதங் காப்பதுவே.

தேவருமேலவர் தீங்கினைக்கூறச் சிவனயன்மால்
மூவருங்கூடியிராவணனாவி முடிப்பதற்கு
மேவுந்தசரதப் புத்திரனாக விளங்கவந்த
காவலனேநீத மெந்தனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧

முந்தவயோத்தியிற் றம்பியர்மூவர் முறைமுயங்கத்
தந்தையின்சொற்படி கோசிகனுக்குத் தவத்துணையாய்
சிந்தைமகிழ்ந்திடத் தாடகைதன்னைச் சிரமறுத்த
கந்தமலர்ப்பதனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨

வலியானகோசிகன் பின்னேநடந்து வரும்வழியில்
கலியாமகலிகை சாபமுந்தீர்த்துக் கிரியைசெய்து
சலியாமல்வில்லை தான்வளைத்தன்று சானகியைக்
கலியாணஞ்செய்த வயிராமாகாத்தருள் கார்வண்ணனே. ௩

சௌரியம்பேசி நின்றந்தைமுன்வந்த பதுவலனை
அபஜயமாக்கி பரதனைக்கேகய நாடனுப்பி
நவமணிமாட நகர்புகுந்தேமுடி நாட்டுதற்காய்
கௌசலபுத்திரனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௪

வைகையுமெய்தி முண்டையினூடு மனவெறுப்பாஞ்
செய்கைகள்கூனி கலைத்திடப்பார்த்திபன் தேம்பவரம்
உய்கையிலான்மகன் பாராளக்காட்டி லுனைவிடுத்த
கைகைதனைப்பணிந்தே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௫

வங்கைமணத்தனன் கைகேசியீந்த மரவுரியுஞ்
செங்கையிலேந்திய வில்லுடன்றம்பியுந் தேவியுமாய்

பங்கயமபோல் முகங் கொண்டுசென்றே குகன் பண்புகந்த
கங்கைகடந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௬

நாட்டியகோசலை நாட்டைப்பரதற்கு நன்மகுடஞ்
சூட்டித்திருவடி பாதுகையீந்து சுக்குடனே
தாட்டிகமாகிய தம்பியுந்தானுஞ் சானகியுடன்
காட்டிகடந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௭

பழுதுசெய்தேவந்த பாவிவிராதன் பணிந்துனடி
தொழுதிடும்போதவன் துன்பத்தைநீக்கித் துயரிலுழன்
றழுதபயோமெனு மந்தணர்க்காசி யளித்தவிசேர்
சமுகிடஞ்சென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௮

வஞ்சனென்றப் பண்ற செய்துசடாயுவனந்தனின்மா
சஞ்சலந்தீர்வுற மூவரும்பன்னக சாலையுற்று
பஞ்சவடியி லரக்கர்வரும்வினைப் பார்த்திருந்த
கஞ்சமலர்ப்பதனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௯

நாரியென்றேவந்த சூர்ப்பநகையெனும் ராட்சசியைக்
கூரியவாள்கொண்டு மூக்கையுங்காதையுங் கொய்திளையோன்
வீரியமாக வுனைத்தொழுதேத்த விழைந்திஃதே
காரியமென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰

தூரந்தானுகிய ராவணன்தம்பியுந் தூடணனுஞ்
சிரத்தொடுதேர்பரி யானைபதாதி சைதத்தியரும்
நிரந்தரமாக முகூர்த்தத்தின்மாள நெடுஞ்சிலையாய்
கான்றனைவென்றவன் யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௧

நிலைபோமிராவணன் றங்கையின்பேச்சை நிசமென்றெண்ணி
மலையாமாரீசனை மானுருவாக்கி வனத்தனுப்ப
சிலைபோல்கிழிந்துதற் சீதையின்சொற்படி சென்றுவில்லான்
கலைமானையெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௨

துலங்கியகாட்டி லிலக்குமணன்செலத் துட்டகுணத்
திலங்கியராவணன் சீதையைத்தேர்மேற்கொண்டெடுத்திடமா
வலங்கினம்பட்சிகள் விணஞ்சேடுபூமியு மெய்யுருகக்
கலங்கிமலைந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௩

சிவந்திருக்கண்களுந் தீயெழத்தாக்கிச் சிறகிறப்பார்
கவிந்துறுதீச் சடாயுவைக்கண்டு கலுழ்ந்துருகி
அவந்தருதிக்கடன் செய்துமுடித்தனற் றம்பியுடன்
சுவர்த்தனைவென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௪

சரியைக்கண்டு தருங்கனியுண்டு தயவுடன்பா
லுவரிவிற்பாய லுருவாங்கனிட்ட னுடன்பம்பையிற்
சிவனுருவான வநுமானைக்கண்டு தெளிந்துமனக்
கவலையுரைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௫

திண்புயமேரு சுக்கிரீவன்வணங்கச் செயமெனவே
பண்புகொண்டேழு மாமரமெய்து நடந்தவென்பை
விண்புதக்கால்கொண் டெறிந்துமூட சீதை வெறுத்தபணி
கண்புகக்கண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௬

வாணுன்மிகுத்திடு தாரகையோடணி மாநகரும்
கோணுமற்கைவச மாக்கிபத்தம்பியைத் தூஷணித்த
வீணுங்கொடுமை வீரன்வாலியைக்கொல்ல வில்லிலம்பைக்
காணுமலெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௭

பார்மீதுவாலியைக் கொன்றுசுக்ரீவன் பதிக்கரசாய்
சீர்மேவுகிட்கிந்தை ராச்சியபாலனஞ் செய்யெனத்தேன்
தார்மேவுகாட்டின் மதங்கவலையினிற் றம்பியுடன்
கார்காலங்கண்டிருந் தேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௮

துணையானபக்குவச் சுக்ரீவன்வாழ்த்தி தொழுதிடப்பே
ரணையானவர்னச் சேனைகணாற்றிசை யாகவென்ன
இணையானதென்றிசைக் கேகனுமான்ற னிருகரத்திற்
கணையாழியீந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௧௯

வண்டுகுயிற்கிள்ளை பாடுமசோக வனந்தனிற்றூர்
விண்டுவின்மோதிரஞ் சென்றீந்துசீதைவிளம்புமொழி
கொண்டுவந்தேனென் சூடாமணியைக் கொடுத்திடக்
கண்டுமகிழ்ந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௰

தருணமிதென்று சார்புக்கிவீடணன் றூழ்ந்தொழில்சேர்
மருமலர்ச்சாத்தியுன பாதாரவிந்தம் வணங்கியநாள்
பருதிமதிநதி பாருளமட்டும் பதிக்கரசாய்க
கருணைபுரிந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௧

இடமானசற்ப சயனத்தினீடுமொ ரேழுதினம்
திடமானசெயதிசமுத்திராசன னெறிந்துதொழ
அடைவானவானரச் சேனையைக்கூட்டி யகலநெடுங்
கடல்வாயடைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௨

திவசகொள்சேனை யிலங்கையிற்சண்டை தொடுத்திடக்கால
கவரியசைத்திடக் கட்டியகூறக் கனசமலைக

குவரியதான மணித்தேரிலூற்றிடு மிராவணனைக்
கவசமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௩

சொர்ணமுற்றோங்கிய தேரோடிராட்சதர் தூளிசெய்து
வர்ணமதாமுதி ரப்பெருக்கோடிடவானவர்கள்
நிர்ணயமாயுனக் காசிவிளம்ப நிட்டூரகும்ப
கர்ணனைக்கொன்றவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௪

சிவந்தவருக்கணை யிந்திரசித்தன் செலுத்துமுனை
மூனைந்தவராவி யழியாமற்காத்த முறையுடன்சீர்
நினைந்துகருடனும் வந்துவணங்கியே நேரின்மனங்
கனிந்துரைசெய்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௫

விண்டலம்பூமியும் வேசனும்வேந்தனும் விண்ணவருஞ்
சண்டனுங்கண்டு மனந்தளர்காலையிற் சஞ்சீவினைக்
கொண்டனுமான்வந் துயிர்தாக்கோகுலக் கூத்தினைக்கண்
கண்டருளவிண்டவனேயெனைக்காத்தருள்கார்வண்ணனே. ௨௬

பொய்மாய்கையாகப் புரிந்திடுமிந்திரச் சித்தனுரம்
மெய்சோர்ந்துயிர்கெடச் செந்தழல்வாளி விடுத்துனிதங்
கொய்வாயெனத்தம்பி மேலன்புகொண்டெழிற் கோவலாக்
கைவாளியீந்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௭

மிண்டனிராவணன் கூட்டியமூல பலந்தைதவிண்மேல்
அண்டருங்கண்டு மழிந்துய்யவோரமோ கணக்கணையாற்
றுண்டமதாகத் துகள்போக்கிராவண தூர்த்தனையுங்
கண்டமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௮

இனிதானசீதை சிறைநீக்கியண்ட ரிடர்போக்கிமேற்
றனியாமிலங்கை விபீஷணர்க்காக்கித் தனுக்கோடிசென்
றுனிதாமுனிவனங் கண்டுஜெபஞ்சொல்லி யுப்பர் மகிழ்
கனியாயமுதுண்டவனே யெனைக்காத்தருள்கார்வண்ணனே. ௨௯

இராச்சியங்காக்கின்ற ராசாதிராசர்க்கும் நான்முகற்கும்
பூச்சொரிவானவர் மாதவர்தம்பியர் பொன்மனைக்கும்
தாட்சியில்லாமல் வசிஷ்டர்கையான்முடி தாங்கிச்சுகக்
காட்சிகொடுத்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௩௰

கார்வண்ணமாலை-முற்றிற்று.

# அரங்கப்பத்து.

இருவினைப்பயனாலிந்த பிகத்தினிலிருந்திடாமல்
மருமலரெடுத்துவந்துன் மலரடிபூசைசெய்தேன்
கருமுதற்போக்கினின்பொற் கழலிணையளித்தாட்கொள்ளும்
அருமறைப்பொருளதான வரங்கமாநகருளானே. ௧

மாயையும்பிறவிநோயும் வல்வினையானதீங்கும்
நாயேனைத்தொடர்ந்திடாமல் நானுனக்கடிமையானேன்
சேயெனக்கிப்போதுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௨

மாதர்தம்வலையிற்சிக்கி மயங்கியேபிறவிநோயால்
பூதலத்தலைந்திடாமற் பொற்பாதம்போற்றிசெய்தேன்
சீதாமுகுந்தாவுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆதியேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௩

மடமயிலென்னுமின்னார் வழிதரும்பிறவிநோயால்
சடமுருவெடுத்திடாமற் றமியனுனுந்தன்பாதம்
திடமதாய்ப்போற்றிசெய்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அடமகன்றமரர்போற்று மரங்கமாநகருளானே. ௪

மண்டலந்தன்னிற்பங்நாள் வளர்ந்திடும்பிறவிநோயாற்
சண்டன்வந்தெனைத்தொடாமற் றமியனுன்னம்பொற்றாளை
தெண்டனிட்டுருகிநைந்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அண்டர்களபணியுங்கோவே யரங்கமாநகருளானே. (௫)

வஞ்சனையானசூது மாயையும்பிறவிநோயும்
எஞ்சியவெனைத்தொடாம லிணைமலர்ப்பதம்பணிந்தேன்
செஞ்சிலைவளைத்தராம திருவருளளித்தாட்கொள்ளும்
அஞ்சினேனென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. ௬

இத்தகைதன்னிற்சன்ம மெடுத்தெடுத்தலுத்தேயாமல்
நித்தமுமுன்தன்பாத நினைவினாற்போற்றிசெய்தேன்
சித்தமதிரங்கிநின்றன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அத்தனேயென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. ௭

கயலிணைவிழியார்தங்கள் கவடெனும்வலையிற்சிக்கி
நயனநீர்சொரிந்துமல்க நானுனக்கடிமையானேன்
ஜெயமதாயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அயன்முதலமரர்போற்று மரங்கமாநகருளானே. ௮

பொய்யெனுஞ்சபலந்தன்னைப் போற்றியேபுகழ்ந்துவித்தந்
தையலார்வலையார்சிக்கித்தியங்கினான்மயங்கிடாமல்
செய்யனேயெனக்கிப்போதுன் திருவருளளித்தாட்கொள்ளும்
ஐயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௯

ஊருநீபேருநீயெம் முறவுநீயறிவுநீயிப்
பாருநீயுயிர்கட்கெல்லாம் படியளப்பவனுநீயித்
தேருநீயருளாளுந்தன் திருவருளளித்தாட்கொள்ளும்
ஆருமற்றேற்குநீயே யரங்கமாநகருளானே. ௰

என்னையுமுருவாய்ச்செய்து மிருகையுநொக்தான்வேதன்
பின்னையுமேமனைவி பிடித்தெனைச்சலித்தான்பூமி
தன்னிலேகுருவாமூர்த்தி தானுணர்த்தினைத்தானி தம்
அன்னையஞ்சுமந்தலுத்தா ளரங்கமாநகருளானே. ௰௧

அரங்கப்பத்து முற்றிற்று,

## இரங்கப்பத்து.

பொருளேசுவையேநவரசமே புலனேபொறியாபுலனறியா
மருளேதணியேவனமலையேவளர் வேகுறைவேமயங்குகின்ற
இருளேயொளியேகதிர்மதியேவிதமேபரமேயெனினுனையும்
அருளேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௧

இணையேதளர்வே வணங்கினர்க்கு மிசைவேநிசைமேயெனக்குவருந்
துணையேயறிவேமறைமொழியே சொல்லேபொருளேசுகமடைந்தார்
குணமேமணமேயருளுடைய குன்றேயமுதேநகர்தலையுறும்
அணைமேற்றுயிலும்மணிவிளக்கே யரங்காவடியேற்கிரங்காயே. ௨

உரமேபகையேயுடலுயிரே யூனேயுறவேயுறுதிஉள்ளத்
திரமேதுதிப்போர்தமக்கிரங்குந் தேவேபிறவிப்பயமிருக்கும்
பரமேகதியேயெனக்கிரங்கும் பண்பேயிமையோர்பணியும்வினைக்
கரமேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௩

வளியேன்றமியேன்மனத்துளிமமேயிறைவாதிருநாமம்
தொழுவேன்வழுவாதிருகரத்தா னுதிப்பேனுவாற்றுணையடிக்கீழ்
விழுவேனுபவபதந்தெளியேன்விழிமேற்கண்ணீர் சொரிந்திடச்சேர்ந்
தழுதேனவர்க்கேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௪

மெய்யாவினைகளொருகோடி யறியேன்செய்துமிருந்ததனால்
சேயசகியதேவுனதுபத மேவாதிருந்தேன்வீணாய்

பொய்யாகியபேருடலதனைப் புகழ்ந்தேனழியாப்பொருளெனவே
ஐயாதுய்யாகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௫

விரிவாகியபேருலகமதின் மேதாவியர்சொற்சாத்திரத்தை
பரிவாய்படித்தேன்பயனுணர்ந்துப்தமேற்பணிந்தேன்பலன்பெறவே
குருவா நீவந்தெனதுகுறை குறையத்தீர்த்தாள்குணமுடையாய்
அருவாய்வருவாய்கதிபெறவே யரங்காவதியேற்கிரங்காயே. ௬

துன்பப்பிறவிக்கடலதனைத் தொலைத்தேநீந்திக்கரையேறி
இன்பப்பெருக்கானந்தவெள்ள மெளிமேயருந்தர்க்கிரவுபகல்
தென்பற்றுன்றன்னிருநாமந் தினமேதுதித்தேன்சிற்றறிவால்
அன்பிற்கழுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௭

குறியேன்கொடியார்மடியுறவைக் கொள்ளேன்விள்ளேனொருநாளும்
பிரியேன்பெரியோர்தனைக்கண்டால் பிணங்கேன் வணங்கிபிணங்கிடு
தரியேன்தமியேனுனதருளைத் தாராதொழிந்தாற்றரணிமிசை (வேன்
அரியேவறியேன்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௮

பழகேன்சிறியாரிணக்கமதைப் பாவந்தருமின்னார்தனைக்கண்
டிழந்தேனென்றனிருதயத்தி லெளியேனின்னைப்பிடித்தபிடி
நழுகேன்வழுகேன்கிருபைசெய்வாய் நாராயணனேவணமாறு
அழகேபுழுகுங்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௯

என்னாசையினாலிரவுபவ லிதுவேதொழிலாயிளமுலையார்
தன்னால்மயங்கியறிவழிந்தேன் றாமோதரனேகிருபைசெய்வாய்
உன்னாலடியேனுலகுய்ய வுரைத்தேன்தமிழையொருபஃதாய்
அன்னாண்முன்யானையைக்காத்த வரங்காவடியேற்கிரங்காயே. ௰

இரங்கப்பத்து முற்றிற்று.

---

# மெய்ஞ்ஞானஜோதிமயம்.

காணாதுகாணவே மோகினியினுருவமாய்க்
காசினியில்வருக விலையோ
கானகந்தனிலுனது பாததூள்சிந்தவே
கருங்கல் பெண்ணாகவிலையோ
தோணாதுபோலவே தஞ்சனெனபோரதஞ்
சூக்ஷியின்முடிக விலையோ
தொல்லுலகமியாவுமுன் னுந்தியிற்காணவே
சூத்திரம் விளைத்ததிலையோ

நாணமல்கவுரியின் முனற்பரிபதாக்கியே
நரிதனைக்கொணர வில்லையோ
நரசிங்கரூபமாய்க் கற்றானிடைத்தோன்றி
நல்வினைவிளக்க விலையோ
வீணனவென்மனம் பணியும்படிக்கருள்செய்
வித்தைகளுனக் கருமையோ
வேதாவையீன்றருள் சிதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே.

ஆருறவுயாருதவி யாருதுணையாருபகை
யம்புவியி லெந்தனுக்கு
ஐம்புலநொடிங்கியே யுன்பதமவணங்கவே
யறிவெனும் தீபமேற்றி
சேருமிடமேயறிந்து தெனைச்செறித்துலகில்
திவ்யசம்பன்ன வாழ்வும்
தேசசமயங்களும் பலமனிதர்செய்கையுஞ்
சிந்தைதனில் யான்மறந்து
பாருலகிலுன்னிரு பதாம்புயத்தடிமையாய்
பண்பிற் பணிந்தேற்றவும்
பத்திவிசுவாசமாய் நம்புமடிபேனுடைய
பழவினை யொளித்தாளவும்
மேருநிகரானபுஜ கருடன்முதுகேறியென்
விழிக்கெதி ரொழுங்கருளுவாய்
வேதாவையீன்றரு… சிதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே.

எவர்சிறியரெவர்பெரிய ரெவர்நிதியரெவர்மடிய
ரீவுள்ளமனித ரெவரோ
என்றுலகிலவரிடஞ் சென்றெணுதெண்ணிய
பொருளானபல நினைவினுல்
தவறிலாத்தவமெனு முயற்சியைத்தேடாமல்
சமுசார சாகரத்தில்
சார்வதாகாலமும் மூழ்கிநிலைகொள்ளது
தத்தளிப்பது ஞாயமோ
கவுஸ்துபசோபவன மாலிகாபரணவரி
நாராயண முகுந்தா
நாரதாதியர்பரவு தாமோதராவேத
நாதாந்த பஞ்சாயுதா
விவரமுடனடிமையை ரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்

வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான சோதிமயமே. ௨

ஆமைகேணிலும்வா லணிப்பிள்ளைகொம்பிலிடும்
ஆமென்றபழ மொழிகள்போல்
அங்குரீயுந்தமிய னிங்குமாம்கடனிடத்
தலையுந்தரும்பு போலும்
ஊமைகண்டுவலையுறு சொற்பனம்போலுமே
லொன்றுமுறையாம லடியேன்
உபயசெந்தமலபத நாடியுற்றதுவும்நீ
யுண்மையுறை யாதகுறையும்
சிமையிற்சொல்லிலே யாவருநகைத்திடுவ
ஸ்ரீராம ராமராமா
தேகியெனபார்க்குதவி செய்யாதபேரில்லை
திருமருவு சார்வபூமா
விமமதகற்றியெனை ரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே. ௩

மண்ணாசைபெண்ணாசை பொன்னாசைமூன்றையும்
வாக்குமன நோக்கவில்லை
வைகுண்டவாசனே நின்றதிருவடிக்கடியர்
மைந்தன்யான் வாழ்த்துதற்கு
கண்ணாரவேதாரை தாரையாயோடிடக்
கைகுவித் துன துநாமக்
கனவின்மறவாமன் முறையோவென்க்கூவியுங்
கருணைபுரியா திருந்தால்
என்னுளுனக்குநா னளடிமையாகுவே
னினிப்பிறவி தீர்வதெப்போ
இரவுபகலுன்பெருமை யுன்மகிமையுன்னும
முன்னாதிருந்த துண்டோ
விண்ணாடரகமகிழ செங்கருடன்மீதேறி
விழிகளித்திடவருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே. ௪

ஆசையெனுமகழியும் மோகவலையாமதிலும்
அஞ்ஞான மிக்குரகரும்
ஆணவமலச்சேனை யணுகுதீவினையாச்சு
வையம்புல நிலததின்மேவி

வாசமுடனும்பத மலர்க்கடிமையாமனதை
வஞ்சமோசம ய்ப் பகைத்தே
வளர்கின்றஅவிவேக தூர்தர்கைகொண்டார்கள்
வாணுளவத் தொழிக்கேன
நேசம்வைத்தனிமதிலு மோசமாங்கோட்டிடையும்
நிலையிலா மகழியாசம்
நின்கிருபையாற்பொடிசெய் தன்னடிமையாகவெனை
ரட்சிப்பதுன் பாரங்காண்
வீசும்புகழ்செங்கருடன் மீதேறியேழையேன்
விழிகளித்திட வருகுவாய்
வேதாவைவீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே. ௬

அகமொன்றுபுரமொன்று மன்பர்க்குரைக்கவென்
னலமனங் கூசவில்லை
அற்பரைக்கண்டாலு நேசித்துநிதிவாங்கு
மாசையள விடுதற்கில்லை
ஜெகமெனுங்காட்டினிக் கலியெனும்புலியுனைச்
ஜெயிக்கவென்னாற் றிடமிலை
தினமுய்த்தேம்பியென் னிருவிழியின்மழைமாரி
சிந்தினேன் சிந்தைநொந்தேன்
சகமுறுவதெந்தநா ளாதிநாள்யானையைச்
சொல்லா லிரக்கிபாண்ட
துரிதமாய்நின்கரத் திரியாற்பழவினை
தொலைத்தன்பர் கூட்டத்தினில்
விசிதமுடனெந்தனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன்வருவாய்
வேதாவைவீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானசோதிமயமே. எ

சொன்னதெல்லாமுனது செவிகேட்கவில்லையோ
துர்த்தனேற்குறுதி யிலையோ
தொலையாதகலிபோக்க வருணோக்கமில்லையோ
துர்த்தனேற்குறுதி யிலையோ
அன்னைமுகநோக்கியோ குழந்தைபாலுணலையோ
ஆள்வினைசிறந்த திலையோ
ஆருக்குமுதவிசெய் தாளவிலையோவடிமை
யென்மனமிரும் பாயதோ
இன்னமும்பக்குவ மெனக்குவரவில்லையோ
இனியெந்தாளதோ

ஈசனுரைவேணுமோ தாசர்பிழைவேணுமோ
என்னுடல் தளர்ந்துகூனி
வின்னமகாமுன்ன மேகருடன்மீதேறி
விழுகாணவந்தருள் செய்வாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. ௮

காகமானதுபார்ப்பின் மென்மேலுமேமெதனக்
காட்சிபெறு சாட்சிபோல
கற்றவர்கணற்றவர்கள் மற்றவர்களுக்கெளிய
கடையினேன் கவிசொல்லியும்
தோகையினடனசங் கீதமறுவாசனைச்
சுவைதேறலிவைகள் யாவுஞ்
சுகமெனுந்தொல்லுலகில் வாழ்வென்பரிலையெலாஞ்
சொந்தமென்னமிக நம்பியும்
தாகமாயெனதுள னென்மகிழ்வின்மூழ்கினேன்
தமியனுக்காவதுண்டோ
சரணகமலங்களிற் பாமாலைசாத்தியென்
சஞ்சலமெலா மொழிந்தேன்
மேகநிகர்வண்ணனே கண்ணனேகருடன்மீ
தேறிவிழிகாண வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. ௯

ஆதியந்தமுமிலாச் சங்கரனுநான்முகனு
மகிலம்படித் தழிப்பார்
அனந்தகல்யாணபரி பரவாசுதேவனே
யன்னைபோன் மன்னுயிர்க்கும்
நீதிநெறிதவறாத தாசாதிதாசர்க்கும்
நீயபயசமயமென்ற
நேசர்க்குமுன்னின் றிரட்சிக்கும்ரட்சகனி
னின்னடிமையாகினேனே
சோதியேசோதனைசெய் யாமலைம்படையுடன்
றுளசிமணி மார்பிலங்க
சாதரவிலக்குமி சமேதராய்ப்பூமாரி
துந்துமி முழக்கத்துடன்
மேதினியிலெந்தனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறிவென் முன்வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெய்ஞ்ஞான ஜோதிமயமே. ௧௦

மெய்ஞ்ஞானஜோதிமயம்-முற்றிற்று.

## ரகுராமப்படலம்.

உலகமெனும்மோர்வனந் தன்னிமூல்கேணியத
னுள்ளான சிங்கமொன்று
ஒங்குமதயானையோ ரானைதாத்தவவ
ளேடியத்தாவில் வீழ்ந்து
பலமுள்ளஅறுகம்வேர் பற்றிகால்தத்திசிரசில்
பட்சிபோ லூசலவாய்
நலமற்றமனிதனைத் தேனீயடிக்கவிவ
ருவினுற்றேன் றுசிதர
நாகரீகத்திஞெடு நால்வாயமேற்கொள்ள
நான்கண்ட சமுசாரமே
இலவுகாத்திட்டகிளி யாகமன்மறைகள்முறை
யிருமலர்ப்பத மருளுவாய்
என்னுளுமடியார்கள் கண்ணுனதேவனே
யென்னையாள் ரகுராமனே.

அரசனருள்பெற்றபேர்க் கல்லிலையொருவர்பகை
யாவதிலைகுறை யொன்றிலை
அதிகாரம்மேன்மையில லாததிலைநிதிமலையோ
டியாவரும் வணங்காதிலை
முரசமுடன்வாத்திய முழங்காதகாலமிலை
முறைமையற நெறிதவறிலை
மூர்த்தண்யதிசையெனினு மீதிலக்கினச்சையிலை
மோட்சத்தில் வாஞ்சையாகி
சாசகுணபிரசாசு பரிசினையளித்தனிசெய்
சலசவேர்சன மாதவா
தனியானதிருநாம மினிதாய்நினைக்கவும்
ஜன்மதீவினை தீர்க்கவும்
இரவுமிதுதிபரவு பெரியகுலதெய்வமே
யேழையேற் ருள்செய்தாள்வாய்
என்னுளுமடியார்கள் கண்ணுனதேவனே
என்னையாள் ரகுராமனே.

உ

விதியினல்வருவதல்லாது வேறொன்றில்லை
மேன்மையோர்சொல விதென்றால்

ம்மதினியிலுன்றனைப் பூசிப்பதேன்யாக
  வேதங்கள் யாசிப்பதேன்
மதியினல்விதியினை வெல்லலாமென்றமுன்
  மார்க்கண்டர் சரிதையோகம்
வான்சித்துமறலியை யடக்கியாவருமகிழ
  வயதுபதினறு பெற்ருர்
துதியினலுன்பதத் தென்மனக்குறையெலாஞ்
  சொல்லிமுறையிட்டுருகினேன்
தொல்லைவினைவந்தெனச் சஞ்சலியஞ்செய்யாமல்
  சுகமுடனிருக்க வருள்வாய்
எதிரிபாவித்தெனைக் கைவிடேதனீதமோ
  ஏழையுன் னடிமைக்கடிமையாம்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
  என்னையாள் ரகுராமனே. ரு

வெட்டவெளிதன்னிலே கட்டிட்டமேகத்தின்
  மின்னலுண் டானவகைபோல்
மேதினிலுற்பவத் தேகமதிலுன்னுடைய
  மெய்யருளிருந்தொளிரவே
நிட்டைவெளியாகியே யறிவைத்துணைக்கொண்டு
  நெற்றிமத்திப் பார்வையால்
நீயென்றநானென்ற நடுவின்மத்திசமென்று
  நினைவதனை யூடறுத்து
திட்டமுளவுந்தனிரு திருவடிக்கடிமையாய்த்
  தெரிசித்து முத்திபெறவே
தீபிலிடுமெழுகுபோ லனுதினமுநாடியே
  தேடிமனமவாடி நொந்தேன்
இட்டகுலதெய்வமே பையராவிற்றுயி
  லிரங்காவிரங்கவேணும்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
  யென்னையாள் ரகுராமனே. ௬

கோனினைக்கிற்றிரண் மேருமேருவுங்
  குணமிலாத் திரணமாகும்
குருநினைக்கில்கல்வி ஞானமாமோனமாங்
  கோதிலா மோட்சமாகும்
வானினைத்துலகில மும்மாரிபொழியுமழை
  மாறின்வண்மாறி தழையும்
வையம்பகைக்கினை முய்யும்வகை வேறில்லை
  வாணியருளிற் கல்வியாம

நீயினைக்கிற்கொடிய ர்மவினைநிற்குமோ
நின்னதரு ளின்னமின்ன
நேரவில்லையோவசட னிசமிலாப்பாவியேன்
நின்னடி மறைந்ததுண்டே
ஏனினைக்கா மலிம் ம ய்கைக்குண்மூழ்த்தினை
பென்றென்னை மீட்டாளுவாய்
என்னாளுமடியார்கள் கண்ணனதேவனே
யெனையாள் ரகுராமனே. ரு

அரசனும்பேரறிவி னுண்மனக்கள்ளனை
யன்பெனு மணிக்கயிறுகொண்
டசையாதிருக்கியுன் னடிமலர்க்கடிமையா
யாக்குவோ மென்னடவிசூழ்
டரிகள்ளபாட்டையில் வரும்போதுபாழான
பசியாம் பெருங்காற்றினால்
பதறிபெறிமூ றிடச் சைதன்யவாடவப்
படுமெனக் கள்ளனோடே
புரியதாமனமெனும் பாசம்பொடிப்பொடிப்
போயதா லென் றுகூட்டும்
பொருளில்லையருளில்லை வெண்ணெய்படிமூன்றூழி
போனகதைபோ லாகினேன்
இரவுபகனின்னும சீவனஞ்செய்யாம
லென்றைகருன் னுளாமேவனே
என்நாளுமடியா கள் கண்ணனதேவனே
யென்னையாள் ரகுராமனே சா

செப்பமுளமானிடர்க் கொருநூறுவயதிற்
செப்பாதிநித்திரை யிற்போஞ்
செய்குழவிபாலரிற் பத்துவயதேகிடும்
ஸ்ரீயாலச யொருபத்துமாம்
மூப்பதாமாண்டின்மேற் மூன்றூசையற்றறிய
மூத்திக் குகந்தபொருளே
முறைமையுடனுடுவது முதன்மையென்றவ்வைதரு
மொழியின்படிக்கிசைந்தே
தப்பிதமில்லாமலுன் றாமரைச்சரணினை
தனித்தமிருத்தி வாழ்த்தி
சாஷ்டாங்க அஷ்டாங்க மாகப்பணிந்தெனது
சஞ்சலமெலா முறைத்தேன்
இப்பிறவிதீர்த்திட வினிப்பிறவிவாராம
லென்னையாட் கொண்டருளுவாய்

என்னாளு மடியார்கள் கண்ணான தேவனே
என்னையாள் ரகுராமனே. எ

உதயாதிகாலத்தி லொருகடிகையுன்னடிமை
யுன்னாமமுறையாமலே
ஓயாதசாண்குழிக் கிரைதேடியோடியே
யுயிருடன் செத்தபிணமாய்
வதையாதிமுதலான கொடுமைக்குடன்பட்டு
வஞ்சமன நெஞ்சனாகி
மட்டிக்குலாயர்பாற் சென்றுசமயம்பார்த்து
வள்ளல்நீ யென்றுவாழ்த்தி
புதையலீந்தெவரெனப் பூரித்தவவர் தரும்
பொருளையிருகைக்கொடேந்தி
புத்ரதாராதிய ருடன்மகிழ்விலாழுமிப்
புன்மையனு காதலன்னாம்
இதயமலர்தன்னிலே யிருபதாம்புயமலை
யென்றுயான கண்டுய்வனோ
என்னாளுமடியார்கள் கண்ணான தேவனே
யென்னையாள் ரகுராமனே. அ

அம்புவியில்யாவரும் கண்காணவுன்னடிமை
யாக்கியெனை யாள்வதென்றோ
ஆசாபைசாசத்தைத் துரத்தியுனருளாலே
வமுதங் கொடுப்பதென்றோ
கும்பலாய்வருகின்ற வினையுனதுமகிமையாற்
குறைந்தழிந் தொழிவதென்றோ
குணமிலாவைம்புலக் கயவரின்கருணையாற்
குலநாசமாவதென்றோ
சம்பமாமைம்புயச் சரணமலரன்பினாற்
றரிசிக்கு நாள்களென்றோ
சாகாச்சம்சாரமொழியீதென்றோதாசர்
தப்பொடு பிறப்பதென்றோ
இப்பரிற்றுன்பவின் பங்களில்லாதநீ
யேழையையவதிப்பதென்றோ
என்னாளுமடியார்கள் கண்ணான தேவனே
யென்னையாள் ரகுராமனே. (௯)

கள்ளுண்டுதெள்ளுண்ட பேயர்போல்மதமேறு
காரானையோர் பித்தர்போற்
காடென்றுகாடென்று மேடென்றுதெரியாமல
காசினியெலா மலைந்து

முள்ளுண்டகள்ளமன மூடன்கணில்லாத
   மூவர்க்கஞ் சகனுமெனே
மோகவாரிதியின்மூழ் காமனின்மயலான
   முத்திவழி கூட்டிநாடி
தெள்ளுதமிழ்வாணர்சிவ னடியாரின்தாசர்போற்
   சிறுவனுக் கருளளித்ததால்
தேவாதிதேவமன திவ்யகுணனுமனே
   திகழ்ஞான வாசுதேவனே
எள்ளுக்குள் எண்ணேபோ லெங்குமாயாவுமா
   யிருவினை தொலைக்குமரசே
என்னுளுமடியார்கள் கண்ணுனதேவனே
   யென்னையாள் ரகுராமனே. ௰

ரகுராமப்பத்து முற்றிற்று.

---

## கோவிந்தப்பதிகப் பத்து.

---

நாகமேற்பள்ளியா யோகநித்திரைகொள்ளும்
   ராகவமுகுந்தனுமன்
நாராயணாவென்று பாராயணஞ்செய்து
   நாளுக துக்கப்படற்கே
தேகமேசீர்க்குமிழி சிந்தையோபலவிதஞ்
   செய்கையோ வெகுவினைதம்
செப்பும்வசனக்கோடி தப்பிதமிதற்கென்ன
   செய்வேனினி யாரைநோவேன்
பாகனையமொழிமாதர் மோகவலையிற்சிக்கி
   பஞ்சென்ன நெஞ்சுழன்று
பாழானநாமத்துள் வீழாமலென்றனைப்
   பட்சம்வைத் தாளுதற்கு
வாகைமேற்கொண்டபுய செங்கருடன்மீதேறி
   வல்வினை யகற்றவருவாய்
மாயா அவதாரனே சீதாபிராமனே
   மாதவா கோவிந்தனே. க

கருவாய்கருப்பையிற் கண்டுண்டுதசமதிக்
   காசினியிலே பிறந்துக்
கருணையுடனுனது திரு வடிவமலாப்பணியாத
   காமினு னுடல்கூசவும்

உருவாயெனைத்தந்த வன்னை தந்தையருற்ற
வுருவினம் வெறுத்தேகவும்
உலகவாழ்விற்பழகு பலமனிதர்பேசவும்
உருகவலையலை வீசவும்
அறுவானவறிவினர் போலமதிமோசமா
யாற்றிற்கரைத்தபுளியாய்
அவத்தில்வாணுள்கெடுத் தலையுமடிமைக்குனது
அடிமலரடித் தாளவே
மருவிசுமாலைபுய செங்கருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. (உ)

பொல்லாதவேலையோ சொல்லாதகாலமோ
பூர்வம்யான் செய்தவினையோ
பூதபேதத்தில்வளர் மாமாயையாசையாற்
பொய்யான வாழ்வைநம்பி
உல்லாசமாகவே உண்பதுமுடுப்பதுவு
மோயாம லிரவும்பகலும்
உறங்குவதல்லாலுனது திருநாமமந்திரத்தை
யுன்னுவதெல்லாமறந்து
எலலாமறிந்தவர்கள் போலும்வாயாற்பிதற்றி
யீடொருவ ரில்லையென்றே
இறுமாந்துதிரிகின்ற வேழையேயென்னைநீ
இப்போதுரட்சிக்கவே
வல்லாண்மையானபய செங்கருடன்மீதேறி
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே, ௩

போகபாக்கியமாக யில்லறமிருந்துன்னை
பூசை புரிவோரனந்தம்
புலனைந்தடக்கியே மலையேறிமாதவம்
புரியுமுரியோ ரனந்தம்
சேகரமதாகவே நல்லடியராய்வந்துன்
சேவைசெய்வோரனந்தம்
திக்குவேறில்லையென் றக்கவிரியிலுன்னும
தீர்த்தங்கள் வோரனந்தம்
மோகமுடன் அஷ்டாட் சரத்தையுளம்வைத்துனது
மோனமுனி வோரனந்தம்
முத்திக்குயாவரும் பணிவாயானமுழுமூடன்
முண்டகச் சருணருளவே

வாகுபெருசெங்கருடன் மீதேறிநாயினேன்
 வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
 மாதவா கோவிந்தனே.

உந்தனுக்கொருகாசு சற்பூரமலர்மாலை
 யொளிதீபமிஃது செய்தால்
ஓலமிட்டலருவேன் தர்மபரிபாலன்
 முக்குதுசெய் வோரைமதியேன்
நிந்தனைப்பேச்சலா லுந்தநற்றிருநாமம்
 நினைவிலும் பேசியறியேன்
நேமமல்லாமல்நிதி யாசைகொண்டேனலால்
 நின்மதம் பூசைகுறியேன்
இந்தவிதமெனதுசெய நந்தநந்தாவேழை
 யீடேறவென்ன நவில்வோம்
ஈராறுநேமனே சேஷகிரிவாசனே
 இப்போது தயைகாக்கவே
மந்தரகிரிக்குநிகர் செங்கருடன் மீதேறி
 வல்வினைபகற்ற வருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
 மாதவா கோவிந்தனே.

காட்சியாய்நின்னுபய கமலப்பதந்தன்னைக்
 காணும்வகை தேடுவழியுங்
காணுமனக்குறைவி னூர்கவலைகொண்டயர்வு
 கண்டுநின றேமாரியும்
வீட்சணகடாட்சமுடை மெய்யன்பருக்கடிமை
 வேலைசெய் வேசாரியும்
வீணனமாயமோ கத்தில்வாணாள்
 விடுப்பதோ மெய்க்காட்சியே
தாட்சியாய்க்கோடிபிழை செய்தாலுமெள்ளளவு
 தாட்சணிய மென்பதிலையோ
சர்வகணரட்சக தயாளுநீயல்லவோ
 தற்காக்க நல்லசமயம்
மாட்சிபெறவாச்சுதென் றேகருடன்மீதேறி
 வல்வினை யகற்றவருவாய்.
மாயாவதாரனே சீதாபிராமனே
 மாதவா கோவிந்தனே.

[illegible]மென்கொடுமை யனியாயமனியாய
 மகிதலத்தி லென்போலிலை

அனிதமாய்மதனுக்கு நமனுக்கும்வாணு
ளவத்தி லொப்பித்ததல்லால்
னுருமுடலைவிட் டுயிர்போகுமுன்னமுன்
னுலவாப் பெரும்பதத்தை
யுறமறிஞரருளினற் கண்டுண்மைநாடா
துலைத்தபெறுமாய் கையதனல்
நானனதென்றதோ ராணவப்பேய்கொண்டு
நன்மார்க்கவழிவிட்டுபின்
நாயினுங்கடையான நாயினேனுன் கருணை
நாடினேனுட் செல்லுமுன்
வாணுடர்மண்ணுடர் மணியவெங்கருடன்மிசை
வலவினை யகறறவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௭

சீலமுளசேஷசய னுதிருப்பாற்கடல்
செல்வனே தசரதற்குச்
செல்வமகவாய்வந் துதித்தஸ்ரீராமனே
சீதாமனோகரத்தாய்
கோலமுளகலியாண ராமாநெடுந்தனுக்
கொண்ட கோதண்டராமா
குணமாதுவாக்பபரி பாலராமாதனுக்
கோடியணை செய்தராமா
ஆலகாலத்தைநிக ராவணுதியர்தமை
யழித்தசெய ராஜசேரமா
அரிபிரியைசானகித னிட்டனுடனமுதுண்
டயோத்திபட் டாபிராமா
மாலையணிமார்பனே யென்னையாள்கருடன்மிசை
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௮

உலகரட்சகனுநீ யுயிர்கள்ரட்சகனுநீ
யுன்செயலா வதான்றிலை
உந்தனற்கிருபைதா னென்றனுக்கில்லையோ
வுயிர்த்தொகையில் நானில்லையோ
மலையமலைபோனெடும் வல்வினைவளர்ந்தென்னை
வாட்டுதே பேயாட்டுதே
மாறுதவறுமைதி மூட்டுதேபிறவிநோய்
வருமென்றபய மாட்டுதே

கலவமர தானமனமொரு நிலையினிற்கவலை
காமிக்கோர் திக்குதிக்குமில்லை
கைவிடிலோவின்னனப ருன்னைநம்பாரினிக்
கனகாம்பரா மனிதார
வலிமைபெறுசெங்கருடன் மீதேறிகண்காண
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. கூ

துக்கசுகபோகமாய் வளர்கின்றயிருவினைத்
தொடரினுழ்ட அருவமாய்
தோகையர்கண்மோகவலையர் முலைமேலாசையும்
சொர்னமலைமேற்பாசமும்
அக்கிசக்கொடியர்பா னேசவிசுவாசமும்
அறிமையறி யார்நேசமும்
ஆனந்தமென் றுயா னகமகிழுபாசமும்
அரிசந்த மணவாசமும்
தக்கபிகபோகமென் றக்கெனுமனத்தையான
தமது திருவடியினிழல்
தாழ்த்திவாழ்த்தாமலிருளான மாய்கைதனிற்
றமியே னுலைந்தழிந்தேன்
மக்கள்தொழவாழ்கின்ற கருடன்மீதேறியென்
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௰

கோவிந்தப் பதிகப்பத்து முற்றிற்று.

---

## சிந்தைகுடிகொண்டபதிகம்.

---

### ஆசிரியவிருத்தம்.

சங்கையறவேதாந்த சித்தாந்தநீதிநெறி
சாத்திரமெலாமுணர்ந்த
சாதுசங்கச்சனி தானத்தடைந்தியான்
சூழ்ந்தடியின்முடிசூடியே
பங்கசவிலோசன பரந்தாமகீர்த்தனம்
பாடாம லிருமந்திரம்
பண்ணுமனுன்னபய பதமலர்க்கூழியம்
பண்ணுமல்வின்னுணபாய்

சங்கணியுமாதர்தோள் சாந்தினரைச்சேர்ந்து
தஞ்சலக் குழியிலாழ்ந்து
தலையெடுக்காமலெனைப் வறுமையாய்ச்சிறுமையாய்த்
தமியே னுனைத்துதித்தேன்
திங்களணிமணிவதன சங்குசக்ராதார
தீவினை யகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. க

சயமானசாயுச்சிய பதவியானடையவே
தொல்லுலகி லுன்னைநிதமும்
துதிசெய்துமதியினுக் குறுதிமொழியிவ்வேளை
சொல்லுமென் றனை நம்பினல்
அயனுரைத்தபடி மயனுகைவதுபோக
மாமென்று மவ்வவர்வினை
அனுபவித்திடவேண்டு மென்றுநெறிசொலுமறைக
ளலறிமுறை யிடுதலாலே
பயமானபாவியேன் பயனென்றுருமையாற்
பணிந்தாதி மூலமென்றே
பாடினேன்நாடினேன் செய்வதென்றோர்
பதிதனைக்கைவிடாதே
ஜெயகரு கேதனச் சங்குசக்ராதரா
தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே உ

எந்தனுக்குப்பாக்ய மீந்தவர்க்குன்னரு
ளிருக்குமே னின்மனைவியால்
எனையாள்வதருமையோ வென்கள்வனுன்மைந்தனு
லென்பிறவி நீக்கலரிதோ
சொந்தமுளதரசரொடு பந்தப்படுத்தினின்
றொண்டனென் றுள்வதரிதோ
தொகைபுரட்டோவுன லாகாதகாரியந்
தொல்லுலகில் சொல்வதுளதோ
கந்தமாதனமுனிவ ரசிபிரமர்யாவருங்
கைகுவி திடுதெய்வமே
காசினியிளம்வற்ற தெல்லாலையிற்சேர்த்தெனைக்
கண்கலங்கச் செய்தனை
சிந்தைவேகத்தின்முன் வருகருடனேறியென்
தீவினையகற்றி யாள்வாய்

சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்ட குருவே.

சந்ததஞ்சந்த்ரனைக் கண்டவிருள்போலவும்
கழல்கண்ட சருகுபோலும்
தபனனைக்கண்டபனி போலவுஞ்சிங்கத்தை
தந்திகண் டிடுதல்போலும்
வந்தனைசெய்யுந்தாசரைக்கண்டுவாழ்த்தவகை
வாயாத மூடர்போலும்
வாடினேன்மாபாவி தேடுருவண்ணநீ
மனதுவைத் தாளவேணும்
சொந்தமுளநின்னடிமை யிந்தவினையூடுபோய்
சேராமலாளாவிடிற்
றொலையாதநிந்தனை யுனக்குகுருநான்சொன்னேன்
திரௌபதை தனக்கருள்செயுஞ்
செந்திகிரியுஞ்சங்கு தங்குபுயகாருண்ய
தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே.

புக்காதகுகையில்லை புசியாதநீரில்லை
புரளாத தொழிலுமில்லை
புண்ணியஞ்செய்வதில்லை பிழைமோசம்விடுவதில்லை
புலையனேன் காரியமில்லை
மிக்கானவேத முதல்வனுங்காணாத
விஞ்ஞான ஜோதிமயமே
மெய்யாகுநின்னுபய செய்யாதனைப்பைய
வித்தைமன வீட்டிருத்தி
அஞ்ஞானமாமட வியைச்சுட்டெரித்ததி
லகங்கார மிருகமோட்டி
ஆசைவலையைக்கொய்து தாசானுதாசனு
ருகும்படிக் கருள்செய்வாய்
திக்காருமில்லைநீ கதியென்றுநம்பினேன்
தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே

மூவாசையுங்கொண்ட வெனகொடுமைபோலிந்த
மூவுலகிலொருவ ருண்டோ
மூதறிவிலாமலே பாதகத்தொழில்செயு
மூர்க்கனெனை யன்றியுண்டோ

பாவரசுபாடலற் பாவோடுவார்கள்போற்
பகர்பேதை யன்றியுண்டோ
பணங்காசு துணிமணிக ளென்றுபகலிரவும்
பறபபவர்க ளென்னிலுண்டோ
நாவாசையாலுனது திருமந்திரத்தையென்
னுவினிலுரைத்த துண்டோ
நால்வர்சபைகூடியே நினைபுகழ்ப்பசனைசொல
நான்செவிகொடுத்த துண்டோ
தேவாதிதேவனீ யறியாததொன்றில்லை
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்ட குருவே. (சு)

உடலைவிட்டுயிர்பிரித லின்றைக்குநாளைக்கு
வொருகணத் தென்பதில்லை
உலைவாயின்மெழுகென்ன உருகிகண்ணீர்பெருகி
யோடியுரை தேடியோடி.
மடைவாரிமீரென்ன வாய்வரண்ட லுதினம்
வாடிமனை வாழ்க்கைதேடி
வந்தபின்கொஞ்சபோ கத்தில்விளையாடிநன்
மனைமக்களைக் கூடியே
இடைமீதிருந்தபட் டாடையைபிழந்தமதி
யீனர்போற் காலமெல்லாம்
இப்படிகழித்தனன் நீகிடைத்துங்கன்ம
மென்னவுன்னின் பெரியசோ
திடமுடனேதடதடென கருடன்மிசையோடியென்
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்ட குருவே. எ

மன்னவாகேசவா நாராயணாசௌரி
வனமாலி வாசுதேவா
மாநிலமனந்தவா கனகூர்மகாசிங்க
மாதவா மணிமாலையா
என்னுநின்னாமமே பன்னிநானுன்னிது
வெள்ளள விரக்கமிலையே
என்னிடவதிஷ்டமுனையோ கொடியபாவியா
னென்னமுன்நாட் செய்வினையோ
அன்னை தந்தையர்கள்போ லாதரிப்பவர்களுனை
யல்லாமல்வேறு கொள்ளோம்

அபிஷேகமுடிகொண்டு வனுமச்சமேதரா
யாசுபுரிவி ரஜைசயரசே
சின்னமில்லாதவட் டாக்காத்தெய்வமே
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்ட குருவே.

நெஞ்சைப்பிளந்திரணி யன்றனைக்கொன்றதும்
நெறியுள்ள தசாதற்கு
வஞ்சகத்தாடகைச் சுவாகுவைமுடித்துவரு
வழியினிற் பெண்ணானதும்
மங்களமதாகவே திங்கள்குலசானகியை
மாலையிட் டேர்புக்கவும
அஞ்சியேசிற்றன்னைபரா காடடைந்துபறை
யந்தணர்க்கருள் தந்ததும்
அழகானதஞ்சைவடி யுற்றுசவுரிக்கரு
ளளித்ததுஞ் சயமுற்றதும்
செஞ்சிலைக்கோதண்ட ராமனேமெய்யெனிற்
றீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே.

அணில்மேல்வரும்கொம்பி தன்னில்கொதிக்கநீர்
ராசினையாக்க வில்லையோ
அந்தரந்தனின்மேக மூத்தற்கலர்பங்க
ளாடிமகிழ் கூடவில்லையோ
தணிவாகுமாமீசன் சிந்தைகண்பார்வையாற்
றேன்றிய கருக்களில்லையோ
தணிவாகயுன்றனுக் கடுமைபனையின்
றெல்வினை தடைப்பதரிதோ
பணிமாசுகாதகற் பாறையேபாபனைசவற்ற
பச்சைநிறமற்ற மரமோ
பரமசிவனணிகின்ற பாம்புவாய்புற்றேவிப்
பாவியேன் செவியிரண்டும்
திணிகொணின்விருசெவிக் கென்சொல்வரவில்லையோ
தீவினையகற்றி யாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே.

சிந்தைகுடிகொண்டபதிகம் முற்றிற்று.

# ஆதிஸ்ரீரங்கப்பதிகம்.

---

கஞ்சாவுமபினியுஞ் சாராயவகைகளும்
கள்ளுமாமிசமும வைத்து
கண்மூடிபெண்ணாசை வைக்குருதிகிட்டையிற்
காத்திருப்பார்களந்த
நஞ்சானபிறர்வஞ்ச மாயத்தைநிசமென்று
நல்லறிவழித்துநிதமும்
நன்மார்க்கவழியெலாந் துன்மார்க்கவழியென்று
நம்பிக்கும்பிக் கலைந்து
நெஞ்சாரவளவற்ற களவுகொலைகாமங்கள்
நீங்காத கோபலோப
நிர்மூடனானும்ப ருடமருவலரிதென்று
நெட்டுயிர்ப் பித்தகாலம்
அஞ்சாதேயென்றனக் காதரவுசொல்லவோ
வந்தரத் தானமாக
அன்பாகமுன்புவந் துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௧

பேசாதமௌனியுட் புறம்பொன்றதாம்பெரியர்
பேசுமனைமக்களாசைப்
பேய்கொண்டபசுவினிற் றேய்பேர்த்தழுவைபோற்
பொய்யைமெய் வேடமாக்கி
தேசாதிதேசமுந் தீர்த்தங்களாடினம்
திருவடிகளைப் பணிந்தால்
தீவினைகள்தீருமென் றாசீர்வதித்துத்
திருத்துளவநீறு மீது
வாசாகயிங்கிரிய வார்த்தைசொல்வாரந்த
வஞ்சகர்தமைப் போலியான்
மனதென்றுநினைவொன்று காசாசைமேற்கொண்டு
வாடியழுமெனை யஞ்சலென்
றாசாபசாசைத் துரத்திநாயடியனேற்
கந்தரத் தானமாக
அன்பாகமுனபுவந் துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௨

பாவியேன்பொல்லாத கோவியான்பஞ்சமா
பாவியான் பெரியோர்களைப்
பணியாதபாவியா னேன்பிறந்தேனையா
பார்க்கவே சுவரிலெழுதும்
ஓவியம்போலஇவ் வுருவோடுதேனலால்
ஒருவர்க்கு ஒன்னைவிட்டு

ஒத்தாசையுதவிதா னிதுவரையிலுண்டோ
உலகளந்தவ னேயுனைக்
கவியேதமிழினாற் றோத்திரஞ்செய்தனன்
கோதண்ட ராமராமா
கோபாலகிருஷ்ணனே பாற்கடலிலேபள்ளி
கொண்ட நரசிம்மரூபா
ஆவிதானுடலைவிட் டகலுமுன்பாகநீ
வந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே.

தென்புடனேயாவருந் திருமால்தனக்கடிமை
செய்வோர்கள் தங்களுக்கு
தீவினையகன் றபோ மென்றதாலுன்றனைத்
தியானமே செய்யவுறுதி
நம்புதலையெந்தனுக் கொருகாலுமில்லையே
நானதுக் கென்னசெய்வேன்
நாராயணாவேத பாராயணாவென்று
நம்புமடியார்களுக்கு
க்ஷிப்பிரமதாய்வந்து முன்னின் றனருளளித்து
சகலவரமும் கொடுக்கும்
தாமோதராவுனது மகிமையைத்தமிழினாற்
சாற்றுதற்கெளி தாகுமோ
அம்புவியில்யாவருங் காணவேயெந்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே.

ஆற்றிலேவருகின்ற வெள்ளமதுபோலவென்
னறிவுதனிலுந்த னற்றாள்
ஆனந்தமாகவே பொங்கிவருவெள்ளமதை
யான்கண்டு மகிழாமலே
சோற்றுடலையழியா பொருளெனயெண்ணினேன்
தோஷகயர்கள் மாய்கையதனால்
சுழல்வண்டுபோலவே யலைகின்றமனமுள்ள
துஷ்டர்களினங்க ளுற்றேன்
கூற்றுவன்போலெனைக் கர்மவினைபோராடிக்
கொல்லுதென் செய்வேனையா
காண்டாங்கர்வண்ணனே கேள்விமுறையில்லையோ
குவலயத்தன்னி லுந்த

ஆத்மகுருவாகியே தேவரீரெந்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௫

கட்செவியின்மீதிலே பள்ளிகொண்டவனுநீ
கஞ்சனை வதைத்தவனுநீ
கபடநாடகனுநீ யாதிநாள்யானையைக்
காத்தருள் புரிந்தவனுநீ
பச்சைநிறமாகவே வளர்கின்றமானுநீ
பாருலகளந் தவனுநீ
பதியுநீகதியுநீயடியார்களுள்ளமதில்
பண்பாயிருப் பவனுநீ
இச்சையாயுந்தனற் பாதமேகதியென்று
மெண்ணுவோர் தங்களுக்கு
இகபரமிரண்டிலும் மேலானவாழ்க்கையுட
னின்பங்கொடுப் பவனுநீ
அச்சுதானந்தனே தேவரீரெந்தனுக்
கந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௬

ஒருவேளைபோசனஞ் செய்துவணங்கியே
னுடலொத்து வருவதில்லை
உள்ளமதிலளவற்ற கள்ளமதிருப்பதால்
உறுதியோ நிற்கவில்லை
திருமறையுமார்பனே யுந்தனைக்கண்டுநான்
தெரிசனஞ் செய்வதற்கு
திவ்டியோதிறமில்லைநீ யுலகஸ்தலமதில்
சிலநாளிருக்கவென்றால்
நிருவாகமெந்தனுக் கில்லாதிருப்பதின்
நெஞ்சென்ன வறியாததோ
நீதியாயெந்தன்வரலாறு கேளிவ்வாறு
நெட்டுயிர்ப் புற்றலைந்தேன்
அரிவையர்கள்மோகவலை தன்னிலேவீழாம
லந்தரத் தானமாக
அன்வாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே ௭

கருமவினையாலே வருகின்றபிணிகளைக்
கண்டுநான் சொல்வதென்ன
காருத்தனேயுனதுவுள்ள மறியாததோ
கருணைகடாட்ச குருவே

மருமவலிமோகமும் சீரிழிவுகுட்டமும்
  மாருத வயிறுவலியும்
மாலையொடுசூலையும் பித்தமொடுவாதமும்
  மண்டைபிடி காச்சலுடனே
இருமலுடன்வாழ்கின்ற மந்தாரகாசமும்
  இன்னமுமனேக விதமாம்
எளியேனை இதுவெல்லா நாடாமலுந்தனல்
  லிணையடிகளைப் பணிந்தேன்
அருமறைகள்தேடியுங் காணுதவஸ்துவே
  யந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
  வாதியே ஸ்ரீரங்கனே.

துஷ்டனிலுதித்திரணியன்மு னுயிரணியன்
  றுஞ்சவெழின்மார் புகின்ற
அஷ்டவிக்கிரகசிங்க இஷ்டபரிபாலனே
  தொல்லுலகி லுந்தனடிமை
சாண்வயிர்வளர்த்திடுந் தாபத்திரியங்களாற்
  றமிட்கவிதை பாடியாடி
சண்டாளர்தங்களைக் கொண்டாடிநித்தமுஞ்
  சங்கடப்பட் டுழன்று
வீண்பொழுதுபோக்குவ தெலாமுனதுசமுகமதில்
  மெய்யாகவேயுணர்ந்தேன்
வேதவேதாந்தனே சிதசமுகுந்தனே
  விண்ணவர்க் கணிமகயரசே
ஆண்மைதலையாயெனக் காதரவுசெய்யநீ
  யந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
  வாதியே ஸ்ரீரங்கனே.

ஊர்பேரிருந்தென்ன வொத்தாசையாயெனக்
  குற்றாரிருந்து மென்ன
உறவாயிருந்தென்ன பகையாயிருந்தென்ன
  வுறுதியா யென்னையீன்ற
பேர்தானிருந்தென்ன பெண்டீரிருந்தென்ன
  பிள்ளைகளிருந்து மென்ன
பெருமையாயுலகமதை யாள்கின்றவரசகற்
  பிரியமு மிருந்துமென்ன
சீர்தானிருந்தென்ன யானையொடுகுதிரையுஞ்
  சிமைமக ளிருந்துமென்ன
தென்புலனைவசெய்கின்ற சண்டனிடபாசமது
  சேர்த்தென்னைக் கட்டும்வேளை

ஆர்தானிருந்தென்ன வென்னுயிர்க்காதார
மாமோ கஜேந்திரவரதா
அன்பாகிமுன்புவந் துபதேசமதுசெய்த
வாதிமெய ஸ்ரீரங்கனே.

ஆதிஸ்ரீரங்கப்பதிகம் முற்றிற்று.

## இராமப்பத்து.

கடலிலலைவதுபோனிதமுமெந்தன்
கவலையினாலறிவழிந்துகவியால்வாடி
உடல்மெலிந்துயானிருந்தால்பாவிமாயம்
ஒழிந்தவெதல்லிதமோவுலகமீதில்
விடமெனவேயெனைத்தொடரும்துன்பநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நடனமிடுபரிகுலசகாயனான
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௧
கற்பதருகாமுனதுசெய்கையென்றுங்
கயிலாசநாதரென்றுகவிகள்பாடி
அற்பரிடஞ்சென்றெனதுதளர்ச்சியெல்லாம்
அறிவழிந்தயானொருவிதமலைந்திடாமல்
விற்பனஞ்சேருன்கிருபையெனக்குநல்கி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நற்புலவராமர்தொழும்ஞானஜோதி
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௨
எந்தனிடயோசனையுந்துன்பவாழ்வும்
இரவுபகலென்னுளத்திலிடைவிடாமல்
சிந்தனையேசெய்திருந்தாலெந்தனானுன்
திருவடிக்குநானடிமைசெய்வதயா
விந்தைபெறமேவியெனதுகவலைநீக்கி
வெயிலொளிபோலுனதுபாதம்விளங்கச்செய்வாய்
நந்தகோபாலனெனவந்தஜோதி
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௩
மாருதிபெண்பிள்ளையுலகமெவாவு
மற்றுந்தன்மலரடியைவணங்குதற்கு
மூடமெனுமிருள்விலகஞானதீப
முருகுந்தனேயெனக்களித்துமுத்தியான
வீடுதனிலென்னுளமருளிவாழ்க
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்

நாடுமயோத்தியிறைவனின்றவிர
　ராமாவென்றுந்தனைநானம்பினேனே

பாதியுள்ளபசுவீழ்ந்தா லுலகிலுள்ளோர்
　பாதவித்துமனமிரங்கியெடுப்பார்துஷ்ட
புத்தியில்லாப்புலிதனக்குயாருதவிசெய்தார்
　பிறவியெனும்பெருமடுவிற்பொய்யாய்வீழ்ந்தேன்
வித்தகனேயெனக்கெவரோநின்னையன்றி
　வெயிலொளிபோலுனபாதம்விளங்கச்செய்வாய்
நத்தம்வளர்கோசலைநாடாளவந்த
　ராமாவென்றுந்தனைநானம்பினேனே.

அகலியென்னசோதரமோபிரகலாதன்
　அண்ணன்மகனோவனுமானம்மான்றானோ
ஜெகமுனிதர்பாண்டவர்கள்தாகைதானோ
　சிறியதந்தைவிடணனோநானொல்லானோ
விகிதமுடனெந்தனைநீயாள்வதற்கு
　வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நகமதினாலிரணியனைவென்றசிம்ம
　ராமாவென்றுந்தனைநானம்பினேனே.

எண்ணெயளமட்டுமெல்லால்விளக்கின்ஜோதி
　யிருண்டிடிலோதம்மாயமவ்வியற்கைபோலே
மண்ணுலகிலென்னுடலுமுயிரும்வேறாய்
　மாறபிடத்தருபிணமாமலர்க்கையாலே
வெண்ணையள்ளியுண்டவனேயெனக்கிப்போது
　வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
கண்ணைதிருமகதிரஞ்சேர்நற்சீதாபி
　ராமாவென்றுந்தனைநானம்பினேனே.

தஞ்சமென்றவடியேனைக்கார்த்திடாமல்
　சம்சாரசாகரத்திற்றளஞ்சிகூற
வஞ்சகமாய்த்தள்ளிவிட்டாலெந்தனாளுன்
　மலரடிக்கீழடிமைசெய்யவருவதையா
விஞ்சையர்கள்மகிழ்ந்திடவேயிந்தவேனை
　வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நஞ்சமுண்டபரமசிவன் மகிழ்பட்டாபி
　ராமாவென்றுன்னைநான்நம்பினேனே.

திடத்துடனின்னடிமையெனச்சேர்ந்தவென்னைச்
　செகமனிதர்தீயர்தம்பாற்சேர்த்திடாமல்
கடத்தயிராபதநிரோங்கஜேந்திரனன்னை
　காத்ததுபோலேழைதனைக்காருமையா
விடபத்தின்மேற்றுகிலும் விபுதர்கோவே
　வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்

கடத்தைகணப்பொருத்தானுஞ்செயகோதண்ட
ராமாவென்றுந்தனைநானமபினேனே
அன்னைதந்தைகுருதெய்வநீயேயென்று
அனுதினமுமுனைப்பணிந்தேனடியேன்வாயாற்
சொன்னமொழிதவறுமல்வரந்தந்தாள்வாய்
தோத்திரமாய்கவிமானபத்துஞ்சொன்னேன்
கன்னல்மொழிலட்சுமியுங்களபமார்புங்
கரமதனிற்றிகிரிசங்குங்கருடன்மீதில்
நன்னயமாய்வந்தெனிருகண்முன்றோன்ற
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௰

இராமப்பத்து முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௯-க்கு பாட்டு-௧௧௧.

பத்தாவது,

## கருடப்பத்து.

ஈயாதனுத்தரைநரன்போயடுத்துவிளகிமனம்
பேயாய்ப்பிறந்தலைந்தென்னுளும்வாடிப்பிதற்றுகின்றேன்
மாயாப்பிறவிமயக்கபருப்பாயுன்னைவாழ்த்துதற்கு
நேயாக்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௧
தினமுமுன்னாமத்தைநாவாற்றுதித்தென்சிந்தைநொந்து
மனமுருகிமயங்குவனோவஞ்சநெஞ்சமின்றித்
தனதாகவாழ்கின்றநின்னடியோர்க்கடித்தாணிதமும்
நினைவாய்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௨
வாயேனிருந்தென்னைசெய்வதுகூற்றன்வருமளவில்
ஆயோனையுன்பாதநான்பணிந்தேனிந்தவம்புவியில்
நாயேனுக்கோர்துணைவேறுண்டோஸ்ரீநாரணனே
நீயேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௩
உறியேறிபால்வெண்ணைகையாலெடுத்தோடியுண்ட
பொறிசேர்களப்புயாசலனேநெறிபோக்கியபொய்ச்
சிறியேனைநின்னன்பர்தொண்டனிற்சேர்க்கத்திருவடியாம்
நெறியேகருடன்முதுகேறிவந்தென்னைரட்சிப்பையே. ௪
ஈரேழுலகினினின்னையல்லாமலெனக்கினிதாய்
பாரோர்புகழ்தெய்வநான்பணியேன்பணியாதனனே
ஓரோர்பொருந்துமடியார்கள்போற்றத்திருவுடனே
நேரேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௫
சனந்தானில்லாரைக்காசுகொடாதகசடரென்னை
இனந்தெரிதம்வகைசெப்புகின்றருஞ்செயலரிந்து

மனந்தாளிறக்கங்கொளாதவுறுகணன்வாடுமிடர்
நினைந்தேகருடன்முதுகேறிவந்தென்னை ரட்சிப்பையே. ௬
ஓதிபெருத்தாலென்னவுத்திரர்தானுக்குதவியுண்டோ
கதியறுத்தென்னை கருப்பையுற்றேன்கமலக்கண்ணனே
மதிகொடுத்துன் றிருநாமந்துதிக்கவரமருளும்
நிதிபடைத்தம்தாழ்கருடன்மேலெழுந்தென்னையிரட்சிப்பையே. ௭
துக்கப்பயிர்வினையும்மனத்தோட்டநற்றோற்வையுளும்
விக்கலுங்கக்கலுமுக்கியமாம்வினையென்றுயரம்
புக்கிடமின்றிப்பொடியாகச்சாயக்குநற்சிறகை
நெக்குங்கருடன்முதுகேறிவந்தென்னை ரட்சிப்பையே. ௮
இறைந்தேயுனதுதிருநாமந்தன்னையிரவுபகல
கரைந்தேமனதுகவலைவிண்டேனென்னைக்காத்தருள்வாய்
விரைந்தேவருகவிதுவேளைவேளைவெகும்பமணி
நிறைந்தேகருடன்முதுகேறிவந்தென்னை ரட்சிப்பையே. ௯
மத்தகத்தானையின்வாய்திறந்துன்பெயர்வாழ்த்தருள
வித்தகத்தாழிவிடுத்தளித்தோய்வினையென்பவித்லதை
சித்தமதிற்பொறுத்தெந்தனையாளத்திருவுடனே
நித்தங்கருடன்முதுகேறிவந்தென்னை ரட்சிப்பையே. ௰

கருடப்பத்து முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை ௰-க்கு பாட்டு-௧௨௧.

பதினோராவது,

## போற்றிப்பத்து.

நாரணாபோற்றிபோற்றி நரசிம்மரூபாபோற்றி
காரணக்குருவாய்வந்தென் கவலையைத்தீர்ப்பாய்போற்றி
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி
சீரணிந்திரங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றிபோற்றி. ௧
வாமனரூபாபோற்றி மணிமச்சகூர்மாபோற்றி
ராமனேராமாபோற்றி நற்பயன்தருவாய்போற்றி
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௨
செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி
சங்கணிகரத்தாய்போற்றி தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி எந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வதனாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௩
அகலிகைக்கருள்வாய்போற்றி யாக்கனாவகைத்தாய்போற்றி
முகினிறத்தானேபோற்றி மூர்த்தியேபோற்றிராஜ
மகனெனவந்தாய்போற்றி மாயசெவ்வாயாபோற்றி
ஜெகமுண்டநாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௪

பஞ்சவர்கள் தூதாபோற்றி பாருலகளந்தாய்போற்றி
வஞ்சனை தீர்ப்பாய்போற்றி வாலியைவதைத்தாய்போற்றி
தஞ்சமென்றோரைக்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி
செஞ்சிலைக்காத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௫

அரிரகுராமாபோற்றி அடியவர்க்கெளியாய்போற்றி
கரிதனைக்காத்தாய்போற்றி கஞ்சனைவதைத்தாய்போற்றி
கிரிகடற்றுயின்றாய்போற்றி விளங்கனியெறித்தாய்போற்றி
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ௬

மாயனேபோற்றிபோற்றி யடியனுக்கருள்மீக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி தசரதராஜனீன்ற
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௭

எந்தையேபோற்றிபோற்றி யிமையவர்க்கரசேபோற்றி
சிந்தையைக்குடியாய்க்கொண்ட தெய்வமேபோற்றிபோற்றி
பந்தம்வேரறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
செந்திருமார்பாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௮

முத்தணிமார்பாபோற்றி மூவுலகளந்தாய்போற்றி
இத்தலமீன்றாய்போற்றி யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசம்வேரறுப்பாய்போற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி! ௯

இருவினைதுலைப்பாய்போற்றி யேகமானவனேபோற்றி
திருவுறுகருடனேறுந் தேவனேபோற்றியுன்பா
லருமியானுறைத்ததொத்திர மேலகளந்தவனேபோற்றி
திருவடியெனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௰

போற்றிப்பத்து-முற்றிற்று.

ஆக சர்வதிருமுறை ௧௧-க்கு பாட்டு-௧௩௧.

பன்னிரண்டாவது,

## பரப்பிரமப்பத்து.

---

என்னால்முடிந்ததினநாள்வரைக்குமிரவுபகல்
சொன்னேன் தமிழின்வழியாகவெந்தன் துயரமெல்லாம்
இன்னுமுனதுவருணல்குவாயெளியேன்றனக்கு
பன்னகமேற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே.

எத்தனையோவருகோடான்கோடியெடுத்தனுத்துப்
புத்திமயங்கியுன்பாதாரவிந்தப்பொருளறியா
தித்தலந்தன்னிலுழல்கின்றநாயினேனன்மைவழிப்
பத்தனைக்காத்திடுஞ்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௨

செங்கமலத்திருமார்பழகாவுன்றிருவடியை
மங்களமாகப்பணிந்தேதுளத்துனைவாழ்த்திநின்றேன்
இங்கிதமாகவருள்நல்குவாயெளியேன்றனக்கு
பங்கயஞ்சேர்பதசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௩

மின்னார்க்கொடியிடைவேல்விழிமாதரைமேவிநித்தம்
பொன்னுக்கலைந்துனைப்போற்றமறாலைப்புவியுகுத்தேன்
இன்னிலந்தன்னிலருள்நல்குவாயெளியேன்றனக்குப்
பன்னுதமிழ்க்கருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௪

மச்சகூர்மவராகநரசிம்மவாமனனை
அச்சுதநாமத்தரிகிஷ்ணநாமனையான்பணிந்தேன்
இச்சையதானவருள்நல்குவாயெளியேன்றனக்கு
பச்சைநிறமுள்ளசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௫

இந்திராதிபோற்றியபொன்னரங்கேசனிணையடியைச்
சொந்தமதாகவேநான்பணிந்தேனிந்தவொல்லுலகில்
எந்தையுன்மைந்தற்கருணல்கியாண்டுமிம்மைதந்து
பைந்தமிழும்புனைசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௬

சுருதிமொழிந்தமுறைப்படியுன்னைத்தொழுதிரஞ்சிக்
கருதிமுக்காலமுங்கைகுவித்தேனற்கதிபெறவே
இருவினைதீரவருள்புரியேன்றனக்குப்
பருதிகுலத்துற்றசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௭

மாத்தலராகியமங்கையராசையுமாமயக்கந்
தீர்த்தவனேயென்னுருவொழித்தால்திருவேங்கடவா
எத்தத்தாயடியார்க்கருணல்குமிருவிழியாற்
பார்த்தெனைக்காத்தருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௮

வையகந்தனிற்பைபையாதலோபியர்வாசல்சென்று
பொய்யுறைசொல்லிப்புகழ்ந்துறவாடிப்பொரிந்துளைந்தேன
ஐயனேயுந்தனருணல்கியாண்டருளாயிரம்வாய்
பையரவிற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௯

வேண்டுகிலேன்மண்ணில்வேந்தர்தம்வாழ்வும்பத்தாசெல்வம்
நீண்டபொன்மேனிமுடியிந்திரப்பட்டமும்நித்தியமாம்
ஆண்டவனேயுன்னடியார்க்கடியவனுகவருள்
பாண்டவர்நேயாசீதாபிராமப்பரப்பிரம்மமே.

பரப்பிரம்மப்பத்து முற்றிற்று.

ஆ-ா சந்நிதிமுறை ௧௨-க்கு பாட்டு-௧௪௧.

பதின்மூன்றாவது,

## குருவிருத்தமாலை.

பெண்ணாசையும் பூமியாசையு
மின்னாசையும்வேண்டிவிரும்பிலேன்
சொன்னகாலன்றொடருமக்காலையில்
உன்னனுன்பதமுள்ளத்துருகியே. ௧

வாவிதன்னில்வனமொண்டமண்குடம்
தாவியோரிடம்தங்கியவாறுபோல்
ஆவலாவியுடலுமுன்னணையே
மேவுமோர்நிலைவீடருணகனே. ௨

இரும்புனெஞ்சம்மெனுமனத்தீயரை
விரும்பியான்றுதிமேவுதனீதமோ
சுரும்புமொய்க்குந்துளவமணிமாலையாய்
அரும்பொன்னுடையரிகரிராமனே. ௩

கடலுப்புநற்கலக்கக்காபுதே
ருடனிசைந்திடினும்பாரழ்வாறுபோல்
உடநல்லூழிருழ்வினைப்பாலதாம்
அடிமைசெய்தெனையாட்கொள்ளவேண்டுமே ௪

கள்ளவைம்புலக்கள்ளக்கசடதை
மெள்ளவிட்டுவெளியிற்பிரிந்துயான்
உள்ளமானவொருவனைக்கண்டசீர்
வள்ளலென்றுவணங்கவருள்செய்வாய். ௫

பூமிதன்னிற்பொருந்தினரைத்திரை
சாமியென்றுரைசாற்றலுனீதியோ
நேமிகையுளிறத்துவச்சுஸ்தல
சாமிநம்பினன்றுமறைதாளையே. ௬

உன்னைவணங்கவுரித்தென்னுடற்கரம்
வனமிங்குமவகையுளதேவையா
தினமிப்படிமந்தைசிதறினுற்
கனவிலுன்னையுங்காண்பனோகர்த்தனே. ௭

ஓங்கலமுதின்றிடிலோரவல்
நேர்கிடைக்குமெனுமொழிநிச்சமயம்
சீர்பதத்தைநினைந்துதிசெய்தனன்
கார்வண்ணக்கண்ணகாத்தருளெந்தையே. ௮

என்னசொல்லியுமீவிராக்கமில்லை
வன்னநெஞ்சாகிமனமிருப்பானகில்
அன்னமேருமயன்செயலல்லது
பின்னையானென்றும்பேசுவதில்லையே. ௯

படிக்கலாத்திருநாமத்தைப்பாடியே
நடிக்கலாமுன்னுடைக்கூத்தையே
பிடிக்கலாநின்னடியார்பொற்றாளையே
இடிக்கலாமனதொடுக்கமதில்லையே, ௰

உன்னையன்றிஉலகினில்வாழ்பவர்
தன்னைநம்பத்தகாதுகண்டாயினி
அன்னையாபெனையாதரியாவிடில்
பின்னையார்துணைபேசபிராமனே. ௧௧

தாயுந்தந்தையுஞ்சற்குருதெய்வமும்
நீயல்லாதென்றனெஞ்சினில்வேறுண்டோ
சேயனைதீவினையாரச்செயாவிடில்
நாயனேயுன்மகிமைகுறையுமோ. ௧௨

ஆர்க்குந்தீவினைநோக்கனுகாமலே
காக்குந்தெய்வக்கருங்கடல்மேனியாய்
ஏக்கமாமெனையின்பம்வைத்தருளுவாய்
தீர்க்கமாஞ்சகநாதஸ்ரீராமனே. ௧௩

வாடிச்சோம்பிவதங்கும்பிரியனுங்
கோடிப்பொய்யுகல்னூரியம்போலவே
தேடிநின்றுதிளைக்குமெளியனை
நாடிக்காக்குநாராயணனுமனே. ௧௪

கண்ணுமூக்குஞ்செவியும்கைகாயமும்
உண்ணும்வாயமுடற்றம்துவநிலை
நின்றிடும்படிநின்னருள்செய்குவரிய்
மண்ணும்விண்ணுமளந்தருள்மாயனே. ௧௫

வாக்குநெஞ்சமனமுங்கலங்கவே
ஆக்கிரமித்தேதன்முனைந்தகமவந்திடில்
சீக்கிரமத்திற்றிருவுடன்றோன்றியே
காக்கவேணுங்கருங்கடல்வண்ணனே. ௧௬

வாசமாமலர்மான்மாதங்கொண்டுனைப்
பூசைசெய்துபுகழ்ந்துரையாமலே
தேசமோசதிருக்கிலஸிந்துவீன்
மோசம்போனேன்முகாரிமுகுந்தனே. ௧௭

சாந்தமூசிக்கலக்கும்புணர்ப்பென
மாந்தர்வாழ்க்கையேக்கத்திலாழ்ந்தனன்
பாந்தமாகப்படித்திமாயநோய்
தீர்த்திடச்செய்யுந்தீனதயாளுவே. ௧௮

வெக்கமாகியபாசவேரற்றிட
தக்கபேரருள்தந்தெனையாளுவாய்

இக்குவேலையுமீன்றனற்றந்தையே
திக்குவேறில்லைஸ்ரீரங்கநாதனே. ௧௯

எந்தனுள்ளத்திருத்திநின்சீரடி
சிந்தையாறத்தெளிந்துகொள்ளாமலே
பந்தமாகியபாசப்பிணிப்பினேன்
எந்தநாட்கரையேறுவனெந்தையே. ௨௰

நீங்கியாயுனைநித்தமும்போற்றியே
சாதிவாறுதவிர்ந்துளப்பெற்றிலேன்
ஆதிமூலமென்றியானையழைத்தநாள்
ஓதும்வார்த்தைதமுன்னோடியமாயனே ௨௧

போற்றிசெய்துனைப்பூதலத்தோரெல்லாந்
தோத்தரித்தநாதிக்குநற்றெய்வமே
கூற்றனென்னுயிர்கொள்ளைகொள்ளாமுனம்
காத்திடக்கடன்கார்நிறவண்ணனே. ௨௨

உரிமையெந்தனுக்குன்பதமல்லது
பெருமைநேரும்பிரபஞ்சமில்லையால்
கருவினாசைகடக்கவெனக்கருள்
திருவளஞ்செரிசீதைமணாளனே. ௨௩

நாளுங்கோளுந்திதியுண்டசேந்திரம்
தேளும்பாம்புஞ்சிறுமையுங்குளவியும்
வாளுமாமறலிக்கைவிற்பாசமும்
மாளவந்தென்னையாளுவைமாயனே. ௨௪

தெய்வமென்றுனைச்சிந்தைதனிலெண்ணியே
கைகள்கூப்பிச்சிரந்துபணிந்துநான்
வைவன்வாழ்த்துவன்வாதைநோயெய்திலேன்
செய்வினையருட்சீதாபிராமனே. ௨௫

மாநிலந்தனில்வாழ்கின்றபேயனை
சலனமாகவிகட்சிசெய்யாமலே
ஞானவானனாநாடியபாதனே
மோனமாகியமுத்தியளிப்பையே. ௨௬

மாப்கைகயென்னுமோரன்னைமறித்தவள்
சேயன்ஞானந்திரம்பினின்றுபத
நேயமாகியநேசர்க்குக்கரதனை
ஞாயமோரகைவிடுதலஜநார்த்தனே. ௨௭

உந்தன்பொன்னடிக்கேதுசெய்தேழையான்
எந்தநாதர்க்கியம்பியிறைஞ்சுவேன்
நந்தகோபன்சோதைக்குவளர்ந்த
மைந்தனேமுகுந்தாவாசுதேவனே. ௨௮

எந்தநெஞ்சினிலெண்ணியதெண்ணமும்
நிந்தைதமானம்நிர்விக்னப்பாக்கியமும்
உந்தனுக்குறைத்தென்றுமேயுண்மையாய்
தந்தனன்றத்தஞ்சாரங்கபாணியே. உக
என்னசெய்குவனென்றுயர்தன்னையும்
பின்னமாகப்பிணிப்பையுநோயையும்
சொன்னதுந்தவுன்றனையடிநாடியே
இன்னமுங்கேட்கவில்லையோராமனே. ௩0

குருவிருத்தமாலை-முற்றிற்று.

ஆக சந்திமுறை கஉ-க்கு பாட்டு-ளஎக.

பதினான்காவது.

## ஆதிமூலப்பத்து.

ஆனைதன்னவமுமொருந்தெய்வமென்றற்பரைத்தமிழாற்
றினஞ்சேர்த்ததிர்ந்துக்கிரிகின்பேதையின்றீங்ககற்றி
கனந்தேறனதுகழலிணைபோற்றிகவலையரி
மனந்தோனெனக்களித்தாளாதிமூலமகாதெய்வமே. க
பரியாசமாயுனைநாவாற்றுதிப்பதும்பன்னுதமிழ்த்
தெரியாதபேரிடஞ்சென்றுரையாடியசிறுமையெல்லாம்
பரிவாயுரைத்தெந்தனெஞ்சபுண்ணாகிப்படுந்துயரம்
மரியாதையோயெனையாளாதிமூலமகாதெய்வமே, உ
கலையான்மயக்கியகண்ணார்வலையிற்கசிந்துருகி
நிலையானவாழ்வென்றவர்மனைக்கேநித்தநேசம்வைத்து
தலையாப்பிறவிக்கடற்கரையோத்துனையுமற்றேன்
மலையாமலெந்தனுக்காளாதிமூலமகாதெய்வமே. ௩
சொல்லாதேவுன்றிருநாமகல்லுரைசிந்தைதனிலி
னில்லாததோநின்றிருவடிநின்னடியார்க்குறுதி
சொல்லாததோஜகரட்சகநீதிதொடர்ந்திடின்மேல்
வள்ளாளகண்டனீயோதிமூலமகாதெய்வமே. ச
அன்னாளிலங்கைப்பதிவாழ்ந்தாட்சதாத்தனையுஞ்
சின்னபின்னப்படகோதண்டமேர்துஞ்செய்வாதா
பன்னகமேலினும்பார்கடன்மீதிலும்பள்ளிகொண்ட
மன்னாவடிமையைக்காவாதிமூலமகாதெய்வமே. ரு
தோவென்றனைக்குஞ்சரங்கூவுஞ்சாலையிற்கோகநரை
தாவென்றவோட்டதில்சக்கரத்தாற்கிஞ்சுமாரனைமுன்
நீவென்றகாலமுநீவந்தகோலமுநினைத்தடைந்தேன்
வாவென்றெனையழைப்பாயாதிமூலமகாதெய்வமே. சு
காயாதபாலுற்றவெண்ணையைப்போலுநற்காவியத்தை
ஆயாதசொற்பொருட்பாப்போலுமுந்தனருள்விரும்பி

சேயேனவத்திற்றிரிந்திளைத்தேனமன் சேருமுன்னே
மாயாவடிமைகொள்ளுமாதி மூலமகாதெய்வமே. எ
அநாதிசென்றமுன்னேவரைக்காத்தநற் சோதியென்றே
வேதன்முதலிந்திரன்விண்ணோரும் போற்றினர்மேதகன்யான்
ஆதாரம்வேறில்லையுன்னையல்லாதடி யேற்கருள்
மாதாபிதாகுருநீயாதி மூலமகாதெய்வமே. அ
ஓயாக்கவலைபடுவீழ்ந்துழன் றெந்தனுள்ளமெல்லாம்
தீயாகிவெந்துவருகுதையோ திருவேங்கடவா
தாயாகிவந்தெனைக்காத்தருள் வாயிந்தத்தாரணிக்குள்
மாயாவதாரனுநீயாதி மூலமகாதெய்வமே. கூ
துளபாபரணக்கவுஸ்துவ நளினந்துலங்கிவரத்
தளகர்நின்சீரடியான் தொழுதேனச்சுதானந்தனே
இளகாதிருப்பதென்றாழ்போக்கினின்னன்பர்க்கேவல்செய்ய
வலமாகவந்தெனைக்காவாதிமூலமகாதெய்வமே. ௰

ஆதிமூலப்பத்து-முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை கசு-க்கு-பாட்டு கஅக.

உ

பதினைந்தாவது

## சிந்தையின்பத்து.

—(*)—

கண்டாக்கால்முறைமைசொல்லுங்காணவிட்டால்
கலீரென்றுபேர்சொல்லுங்கசடலோபச்
சண்டாளப்புலையர்களை அயன்சிருஷ்டித்தான்
சமஸ்தானபதிக்கமன்றுதாரணிமீதிற்
கொண்டாடிப்பணக்காரகுபேரனென்று
கூசாமல்மாறனென்றுகூறியானும்
திண்டாடியலையாமலருள் செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. க
இப்பாரில்விளங்குகின்றநீதிதன்னை
யெண்ணிமனமுணராதயீனமார்க்கத்
தப்பானபேர்களிடஞ்சென்றுயானும்
சன்மார்க்கநெறியுடையதனவானென்றும்
ஒப்பாருமில்லையென்றுங்குணவானென்றும்
உத்தமனீயென்றுநிதமுறைக்குநாவாற்
செப்பாமலெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. உ
செத்தாலுமறைக்காசுகைவிட்டுச்
செலவழிக்காலுத்தரிடஞ் சென்றுயானும்

மற்றொன்றுமில்லையெனக்குன்னையல்லால்
மகாராஜனேயெனதுவறுமைதீர
ஒத்தாசைசெய்திடுவாயிந்தவேளை
யுண்மையறிவுடையவனேயென்றுசொல்லுஞ்
சிற்றாசைபிணியொழித்துன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. ௩

நன்மைநலமறியாதபேர்கள்கோடி
நகைநவகையுமாடைகளுமணிந்தேகெட்டிப்
பொம்மைகள்போலிருப்பார்களவர்கள்மீதில்
புகழுடையதமிழ்ப்பாடி பொருளைவேண்டி
இம்மைதனிலெளியேனைக்காக்கவந்த
இந்திரனேயென்றுநிதம்பிரந்திடாமல்
செம்மையுடனெந்தனுக்குன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. ௪

கற்றவர்க்குவித்தையென்னவருமையோதான்
காசுபணமெளிதோநீகருதிக்கேட்ட
பித்தனேபோயென்குவந்தாயெனக்குவேறே
பிழைப்பில்லையோவென்றுசொல்லும்பேயர்மீதில்
நற்றமிழைப்பாடிநிதமலைந்திடாமல்
நன்மார்க்கவழிப்படியேநடப்பதற்கு
சித்தமதுதெளிந்திடவேயருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. ௫

பொல்லாததுன்மார்க்கமுள்ளபேரை
போயடுத்துமுகம்பார்த்துபுகழ்ச்சியாக
வில்லாளிவிஜயனென்றும் நகுலனென்றும்
மேதினியைப்படைத்தளிக்கும்விமலனென்றும்
உல்லாசவில்லாளிமதனனென்றும்
உரைத்துரைத்து அறிவழிந்துஉலகமீதில்
சொல்லாமலெந்தனுக்குன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. ௬

பொய்யானபேர்களிடஞ் சென்றயாலும்
பொருமையுள்ளதருமனென்றும்வீமனென்றும்
மெய்யானவரிச்சந்திரன்சிபிதானென்றும்
மேதினியையளந்தருபேந்திரன்றானென்றும்
ஒப்பாரமுடையவிக்ரமார்க்கனென்றும்
ஓலைதனிலெழுதியொருகவியைப்பாடச்
செய்யாமலெந்தனுக்குன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென் சிந்தையானே. ௭

மோகமுடன்சொலைகளவுகாமஞ்செய்யும்
    மூழமூடர்தங்களிடமுன்னேசென்று
நேசமுடன்றமிழ்ப்பாடிப்பொருளேசொல்லி
    நிச்சயமாயுந்தனிடசமூகந்தன்னை
வாசமுடநம்பிவந்தேனெளியேனென்று
    வயிறுவளர்த்திடுங்கருமமனதினுன்னித்
தேசமதிலலையாமலருள்செய்தாளும்
    ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௮

நம்பியிருக்கின்றோர்க்குரெண்டுபேசும்
    நயமறியாவுலுத்தரிடம்நாடிநாவால்
சொம்புடனேபதம்பாடிப் புகழ்ச்சியாகச்
    சுந்தரமாயுனைப்போலுஞ்சுவர்க்கத்துண்டோ
சம்பிரமமாயெந்தனிடவருமைதீர்
    தயவுசெய்வாயென்றுசொல்லித்நயியேன்றனும்
தெம்புடன்வாடாமலருள்நீசெய்தாளும்
    ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௯

மரந்தொருவேளையினிலரைக்காசுதாறும்
    வழங்காதலோபியர்மென்வரிசையாக
விறந்தாசத்தமிழ்பாடிபொருளேவேண்டி
    வித்தமிதுவேலையதாயலைந்துவாடி
இறந்துபிறந்திதுவனையும்திரிந்தோய்ந்தெய்தேன்
    எனையாளும்பொன்னரங்காகதியென்றுற்றேன்
சிறந்தருள்சேர் தாசருடன்யானுமொப்பாய்ச்
    சேர்த்தருள்ஸ்ரீரங்காபெந்தன்சிந்தையானே ௰

ஆக சந்நிதிமுறை கடு-க்கு பாட்டு கசுக

சிந்தையின்பத்து-முற்றிற்று.

பதினாறுவது

## அஷ்டாட்சரத் திருப்புகழ்

பூமிதனிலேபிறந்து பாலனெனவே வளர்ந்துபூவையர்கள் பாலேயுண்டுவருநாளில், பூசைமிகவேபுரிந்துஆசைவெகுவால்விளைந்துபூர்வவினையாலடைந்த-பொருள்கூடி.

காமவழிமேகணிவீழ்ந்து மோகமடுவூடிறங்கி காலநிலை கொளாமலாடி மனம்வாடி, காயமமாராலலைந்து மாயவிருளான்மறைந்துகாதவிபொன்மக்கள்வாழ்வு-பெறலாமோ.

பாமரர்கள் மாளவென்று ராமசரமேவியன்று பாழ்படவிலங்கை செற்ற-ரகுநாதா.

பாவவினைதேடிவந்தென் னாவியை வருத்திடாமுன் பாதமலர்ச் சேர அன்பு-அருள்வாயே.

சேமகரமாக வுந்தன்ராமதிருநாமமந்த்ரத்யான மெனவேதுதிக் குமிடியேன்முன்.

சிதைமணவாளனை மாதவமுகுந்தஞானசீர்கருடன் மீதிலேறி வருவாயே.

வேறு.

தோகையர்வலைக்குள்வாகுடனேசிக்கி துன்பமிகவாகி-மெலியாதே. சூலைமதிவாலைவாலைசுகரோகஞ்சோகைபிணிநோய்க ளணுகாதே

வேகமுடனேமன ஆசமுரும்ஆவி மேவிடுமோர்பாசம்-வரியாமுன், மேதினியிலுந்தன்பாதமலர்தந்தென்வேதையறவந்தென்விழிகோடா.

வாகைபெறுபோரில் போரசரமேவிவாளவுணர்மாயச்-சிறைதீர, வாதுடனேயோத்தி மாதையும் அருத்தி மாடிடிபுனைந்த-ரகுநாதா.

ஓகையுறுதம்பிமார்களோடு நம்பியுன்னடிமைநம்பு-மறுமாறு டொக்குசிறைவீசு பூங்கருடனேறி ஓங்கலெனவென்முன்வருவாயே,

வேறு.

அலைந்தலைந்தறி வீனரைவிதமுமா உகந்தருந்தமிழ்ப்பாடியபதமும்அரங்கதனி லுரையாடியவிதமும் ஒருகோடி, அரிந்தநூலினர்போவேவிதமும் பிரிந்திடா வகை போயின்மதமும் அலைந்து தேய்ந்துள வென்னிருபதமும்-குறைவாகி.

உலைந்துநானவர் பின்சென்றோடியும்இறங்கிவிடா ரவர்தம்பொன்வாழ்வினி லுகந்துமேன்மைமிகுந்திட வாழ்பவர்-குவிசெல்வம், உயர்ந்த நன்றென்பதை விடவேறிலை நிறந்தரமுமிது நிச்சயமென்றுட அருண்டிடாதெனை தெருண்டபேர்களே.

குலைந்திடும்படி பேசியுமேசியும் இகழ்ந்தவேசைமே லாசையுநேசமும் குளிர்ந்த க்ங்கண மாத ராபாசமும்-பெற்றோர்கள், குறைந்த வேழைகள் கும்பிகுளிர்ந்திடசிரங்கைநீரும்விட மயிருந்திய குரங்குநீயர்களோ டுறவாயெனைக்-கூட்டாதே.

மலர்ந்தமல்லிகைமுல்லையரும்படனிறைந்ததாமரைமாமலர் விட்சியும் மகிழ்ந்தமாமணி யுந்துளவுந்திகழ்-ரகுநாதா, வளம்பொரிந்திய பிந்திரைபானுடனுளந்திருந்தியநல்லடியார்தொழுங் குலவியவானகருடன் மேலேறியே நிதமும வருவாயே.

வேறு.

சாகறுணியென்றுனை வணங்கிலேன் வீணிலே மாதர்மயல் கொண்டுபிணியுண்டிலேனுணிலேன் சாகாமுனேர்கொடிய சமுசாரவாழ்க்கையாற் றளர்வேனே.

தூதர்களுமோலையோடு ஓடிவந்தாரிதோ மாதரின் மக்களுடன் மேல்விழுந்தாரையோ சூசினைக டெறியாமல் மாறிபோமெலன்கணீர் சொரிபோதில்.

ஆதாவா யண்டையர்வந்துகூடியே மாதர் மனைமக்களைவினைந்து நீரோடியே வாடுமுடியாடென வுடர்கதையாய்நாடியே அரைச்சாவி.

பேதைமனையாள்தொடப் பிள்ளை நானென்றிடப் போதமத்ய ஸ்தப்பிரதேசர் தழைக்கிடப் போயெனவவஸ்தைப்பெருதுகருடன் மீது வருவாயே.

சடம்சட்டாவி பிறக்குமுன்னே குரு கூறெனச் சேஷம்மினுக்கு முன்னே நாடி தவறிப்போய்கில தாண்டு முன்னேமுறைபுறவோர்கள்

இடம்விட்டொருவிச் சேருமுன்னே யென்கடனைக்கண்டுசெலிக் குமுனேமுடி யிடையிற்றேரிலிருக்கு முன்னேபறை பொலிவேயடே.

படியப்பாடைபெடுக்குமுனே வழி முடியப்பொரி சூமேகுமுன் னேகடி படியுமாசனம் போகுமுனேகூ மீதேற்றி.

குடமுமிட்டறுங்குற்றமுன்னேகடு தலையிற்கொள்ளிநாட்டு மு ன்னேகல குவலெனமூண்டெரியுமுனே நீயருள்வாயே.

அஷ்டாட்சாத்திருப்புகழ்-முற்றிற்று.

ஆக சந்நிதிமுறை கசு-க்கு பாட்டு-கசுடு.

---

பதினேழாவது.

## அலர்மேலுமங்கைத்தாயார்பேரில்பதிகம்.

—(*)—

நேர்துறை.

சூதேவிளைக்கின்றமின்னார்கள்செய்யுந்தொழிலதனுல்
வாதேபுரிந்துமயங்குவனேவிந்தமாநிலத்திற்
றீதேயகற்றுந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மாதேதறியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. க

வனேமிகுத்திடுமங்கையராற்சிந்தையுள்ளமட்டும்
நானேதவிக்களுாயமூண்டோகற்றலவரங்கற்
றேனேகமழுந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
மானேயரியக்குடியலர்மேலமங்கைமாமகளே. உ

பயமேவிளக்குமெனச்சொல்லுங்கட்பாவையரால்
துயரேமிதந்தலையாமலுனைத்துதிசொல்லுவனே
ஜெயமேவிளக்குந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
மயிலேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௩

உடனேபலபலவாயெடுத்தோய்ந்துன்னுபயபதம்
படமேகதியென்றுயான்பணிந்தேனிப்பரப்பதனிற்
திடமேகொடுக்குந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
வடியேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௪

கருவூர்புகுந்துகுடியாயிருந்திந்தக்காசினியில்
இருமாதவஞ்செய்துநான்வளர்ந்தேனுன்னருணல்குவாய்
திருவேசிறந்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருளு[redacted]
மருவேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௫

நிலையானவாழ்வென்றுனீயிருதாளையென்னெஞ்சில்வைத்து
அலையாதிருக்கவரமருள்வாயிந்தவம்புவியில்
சிலையைவளைத்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருள்வி
மலையேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௬

விதியாயலைந்திடுஜென்மாந்திரத்துவினைப்பயனால்
கதியேபெறுமலுலைந்தலைந்தேனுன்கருணைசெய்வாய்
நிதியேதொடுக்குந்திருவேங்கடேசனேயமுற
மதியேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௭

அகமேமகிழ்ந்துன்னடிபணியாமலரிவையர்தஞ்
சுகமேமதியென்றுறுங்கொடியேனிந்தநொல்லுலகிற்
புகழேவிளங்குமிதுவேதனுகியபூபதிக்கு
மகளேயரியரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௮

தாழ்வேகொடுத்தெனைச்சஞ்சலத்தாழ்த்துஞ்சமுத்திரத்தில்
வீழ்வேன்தடுத்தெனையாட்கொண்டிரட்சியுமெய்ப்பொருளே
ஆழ்வார்பணியுந்திருவேங்கடேசனகனிரைந்த
வாழ்வேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௯

தாயேயுனையன்றியெனக்கோர்துணைசற்றுமில்லை
நீயேமனுவொன்றுதந்தருள்வாயஷ்டலட்சுமியே
சேயெனையாளவும்வேங்கடமாலுடன்சேதிசொல்லி
மாயாமற்காத்தருள்வாயலர்மேன்மங்கைமாமகளே. ௧௦

அரியக்குடி

அலர்மேலுமங்கைத்தாயார்பேரில்பதிகம்.

முற்றிற்று.

---

ஆக சந்நிதிமுறை ௧௭-க்கு பாட்டு-௨௭௫.

## பதினெட்டாவது,

## நேரிசைவெண்பா.

பொன்னரங்கர்சந்நிதியிற் போந்துவளம்வந்துகண்டோர்
தன்னைச்சன்மப்பிணிக்ன்சாராது-இன்னிலத்தை
ஆள்வார்சுகம்பெருவா ராண்டபின்னும்பொன்னுலகில்
வாழ்வாரவர்க்குவரம். க

இவ்விடத்திற்றுனே யிருக்கவென்றுலேமனெட்டான்
அவ்விடத்தில்வாழ்க வயனெட்டான் எவ்விடத்திற்
போடுவேன்பொய்யுடலைப் போக்கடித்துப்பொன்னரங்கா
நாடுவதென் றன்னையே நான். உ

நானென்றவாணவத்தை நாசமுறச்செய்தடிமை
தானென்றெனையுன்றன் றுன்மலர்க்கீழ்-ஞானமுறக்
காத்தவனேமாற்றரிய காமவினையத்தனையுந்
தீத்தவனேநற்கெதியைச் செய். ௩

எண்ணாதவெண்ணமெல்லா மெண்ணியெண்ணியேழையிரு
கண்ணுவிசோராக் கரைவானேன்-விண்ணுடர்
வந்துநிதம்வந்திக்கு மாதவனேவாகையினேன்
சிந்தையறிந் தென்னையாட்செய். ௪

தீவினைப்போய்நல்வினையாஞ் சென்மப்பயமகலு
மாவினைமுன்காத்த வரதாயோ-ஆவலுடன்
சேஷ்டாங்கமாகுந் திருமந்திரமுறைத்துச்
சாஷ்டாங்கமாய்ப் பணியத்தான். ௫

தீராவினைதீர்க்குஞ் செல்வப்பொருள்சேர்க்கும்
ஓராயிரத்தி னுறைந்திருக்கும்-நோாக
உபகாரவேரியிடை யுற்றவினித்தநரைகொ
ளபயவரதத்த னடி. ௬

ஈனமுற்றதோனுதிர மென்புநரம்புசீயு
மானவுடச்சதமென்றுசையாம்-மாநிலத்தில்
நம்புவதுஞாயமோ நாராயணாநமலச்
செம்மதத்தைநீகிருபை செய். ௭

நேரிசைவெண்பா-முற்றிற்று.

---

ஆக சந்நிதிமுறை ௧அ-க்கு பாட்டு-௨௧௨.

திருவரங்கச்சந்நிதிமுறை சம்பூர்ணம்

## இராமர் பேரில் பதம்.

இராகம்-நீலாம்புரி.

பல்லவி.

ஊழ்வினைகளென்னை வந்தணுகாமலே உதவிசெய்வாய்ராமா

அநுபல்லவி.

பாரிலேமனுமெனைத்தொடராமலே பதமருள்சார்வபூமா நல்ல
வரமருள்பரந்தாமா தசரதனருளிய ராமா ஊழ்

சரணங்கள்.

தாரூதண்டசராசரமெங்கும்
சரியாய்நின்றபெரி யோனே உந்த
நாபிக்கமலமதிலோகம்பதினன்கு
நல்குமெழிற்கரி யோனே பொல்லாத
தீவினைகளென்னசெய்தேனோநான்
பூர்வசென்மத்திலேயறி யேனே இந்தப்
பூவுலகில்வந்துபாதம்வணங்கப்
பொருந்திலேநான்சிறி யேனே பச்சை
ஆலிலைமேற்றுயில் வோனே ஒருக்
காதுமறக்கறி யேனே ஊழ்
மாதவனே அரிகேசவா வைகுண்ட
வாசம்விட்டுபுவி மேலேபோக
ஆதாவாகத்தசரதபுத்திர
னாகவந்தவன்பி னாலே இந்த
பூதலமெய்க்கவேராட்சதரைவென்ற
பூந்துளவமலரி மாலே நிதம்
சீதாபிராமனென் றனுதினமறவாமல்
தியானஞ்செய்வேனேவி னாலே கிருபை
தென்புடன்மெய்பொருக் காலே திவ்விய
சம்பிரமமாம்நெடு மாலே ஊழ்
சித்தசனோங்க ராமனே கிருஷ்ணனே
தேவாமுகுந்தனே ராமா எந்தன்
அத்தனேகோவிந்த அச்சுதானந்தனே
ஆரணக்கூறுபிர நாமா சுத்த
பொற்றலம்போற்றவே கருடன்மேல்வந்தென்னை
புகழ்ந்தருளும்புய வீமா உந்தன்
பத்தன்பஞ்சாட்சரபேருள்ள தாசன்
பணிவிடைகொண்டருள் சோமா உன்மேற்
பாரம்ரட்சிப்பது வின் போமா கோதண்ட
தீரனே சீதாபி ராமா ஊழ்

பதம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

வேண்டாமையாயிந்தஜனனம்-ஒருக்காலும்
வேண்டாமையாயிந்தஜனனம்

அநுபல்லவி.

வேண்டாமையர்மணித்தூண்டா விளக்கான
வித்தகனும்பரிசுத்தமயேஸ்வரன்
மெச்சிமகிழ்ந்திடுமெச்சுதனேநிறம்
பச்சைவண்ணப்பரந்தாமாவென்மேற்பிழை வேண்டா

சரணங்கள்.

௧ பஞ்சபூதமைந்துஞ்சேர்ந்துடலாயிந்தப்
பாரிலலைந்திரைதேடி கொஞ்சிக்
கொஞ்சிமொழிமாதரைக் கூடியாடி
குலாவிரமன்வா வாடி
நெஞ்சிலறிவில்லாமல் நினைவுதடுமாறியே
கெஞ்சிக்கெஞ்சிமிகக் கிலேசம்படுமனம வேண்

௨ ஒன்பதுவாயுள்ள கோட்டை-பூட்டில்லாம
லோரிகரீயாடும் வேட்டை-அதிற்
செம்பொன்மணிவைத்த நாட்டை-யுருக்கொண்டு
திருவடியளிப்பாய்நல் வீட்டை
சம்பிரமாகவுந்தன் றயவில்லாவிடில்வாய்ந்த
துன்பசாகரத்தைத் துணையற்றுள்ளீந்த வேண்

௩ நீர்மேற்குமிழியான காயம்-இதைநம்பி
நிசமென்றிருக்கி லபாயம்-இந்தப்
பார்மேலுன்னுடைய நேயம்-தமியன்மேற்
பட்சம்வைத்தருளும்சகாயம்
காரமேனியான கரிவரதேந்தரா
சீர்மேவுந்தேவர் தொழும்ராமச்சந்தரா வேண்

பதம்-இ-ம்-ஆகிரி

பல்லவி

இனியென்னலாகாதையா-உனைத்தேட
இனியென்னலாகாதையா

அநுபல்லவி

இனியென்னலாகாது முனிவர்பணியுநேசா
இஷ்டகாமியத்தரும் அஷ்டலட்சுமிவாசா இனி

சரணங்கள்

௧ பாற்கடலில் குடியோ-பரமபதம்
பச்சைவாலிலையடியோ

ஏற்கும்பணு முடியோ-தேவரைக்கண்
டிணங்குவதெப்படியோ
மாற்கமதாகவேவந்தெனைரட்சித்துக்
கார்க்குக்கடனுனக்குகார்மேகவண்ணனே இனி

உ தோத்தரிப்பார் சூழ-அயோத்தியில்
அணிந்தாய்நீயர சாள
மாற்றியென்வினை மாளகிருபைசெய்து
மகிட்சியாயெனை யாள
காற்றடிக்கத்தரைமை பூத்திடுஞாயமே
நேத்திரந்திறந்தென்னைக்காத்தருள்மாயனே இனி

ந வேலையடைத்தபரனே இமையோர்கள்
வேதனைதீர்த்தசரனே
வாலிசகோ தரனே-திருத்துள
மாலையணிந்தவுரனே
ஆலயில்லாவூருக்கிலுப்பைப்பூச்சக்கதை
ஆமாநீசெய்கிறபுதுமையுனக்கக்கறை

பதம்-இ-ா-மூகாரி

பல்லவி

தரிசிக்கவேணும் ஸ்ரீராமனை
தரிசிக்கவேணும் ஸ்ரீரங்கனை
தரிசிக்கவேணும் ஸ்ரீநிவாசனை
தரிசிக்கவேணும் ரகுநந்தனைத்

அநுபல்லவி

தரிசிக் வேணும்நல்ல பரிசுத்தமாகிய
ஸ்ரீரங்கநாதனைப் பாரெங்கும்வாழ்பவர்

சரணங்கள்

க காஸ்திரயா றுடன் பதினெண்புராணமூன்
தத்வர்தொண் ணூற்ரூறுந் தனிநான்குவேதமும்
மாற்றியவனுடைய கீர்த்தியைபுலகத்தில்
வாயிருந்திடும்படி யிரணியன்செ திட்ட
நாற்றிசையிலுனை தோத்திரமாய்ப்பாற்ற
நரசிம்மரூபமாய் உரங்கொண்டவனுயிரை
நேத்தியதாகவே கூத்துவன்போற்கொன்ற
நீலநிறமுள்ள மாலின்திருவடி தெரி

உ அண்டருமுனிவரு மெண்டிசையோர்களு
அரக்கருபாதிபிற் பொறுக்கமுடியாமல்
தெண்டனிட்டுன்னைப் போற்றிவணங்கிடத்
தேவர்முனிவர்துன்பம் யாவையுந்தீர்க்கவே

மண்டலத்திலயோத்தி ராசன்தசரதன்
 மைந்தனென்றுதித்த சுந்தரவில்லினுற்
கண்டகனுகிய ராட்சதனைவென்ற
 கரியமாலாகிய அரியின்திருவடி தரி

௩ கஞ்சமலருதித்தமாமன் கஞ்சனுக்காகக்
 கபடநாடகமுடன் கலியுகத்தினின்முனம்
வஞ்சக்கபடமாய் மருவியகிருஷ்ணனுய்
 வந்துவல்லவனென்று பந்துபல்லோர்துதிக்க
பஞ்சபாண்டவர்கள் பாரதப்போர்செய்யப்
 பார்த்தசாரதியாகிக் காத்தருளியதேவா
செஞ்சொன்மொழிந்திடும் பஞ்சாட்சரதாசன்
 சேயனைரட்சிக்கும் மாயகோபாலனே

பதம்-இ-ம்-ஆரபி

பல்லவி

எத்தனைசொன்னலும் கேளாமலிருப்ப
 தென்னபராமுகமோ

அநுபல்லவி

நித்திரையோ திருப்பாற்கடல்வாழ்கின்ற
 நேசனேவைகுந்தவாசனே நான்தினம் எத்தனை

சரணங்கள்

௧ மூவருமோதியராமமந்திரமென்று
 முறையிடுசொல்வேதங் குண்ணவோநீமெத்தப்
பாவங்கள்செய்திட்டபேயன்ராமாவென்று
 பரமபதத்துற்ற தெண்ணவோ
ஆவலுடன்செய்த வால்மீகிகாவியம்
 அத்தனையும்அருள் பண்ணவோ
தேவனேசீதாபிராமா வுன்னுமத்தை
 சிந்தையில்நானிதமுண்ணவோ எத்தனை

௨ விண்ணுடர்மகிழ்பெற ராட்சசப்பூண்டெல்லாம்
 வேரோடறுத்தசரக் கையா-இந்த
மண்ணுண்டராஜர்கள் ராமாயணமென்று
 வாசித்துப்பெற்றபேரு பொய்யா
கண்ணாரக்கண்டுன்னைரங்கஸ்தலமென்று
 காசினியோர்தொழ மெய்யா
என்னுளுமுந்தனடியையென்றெண்ணி
 சிந்தாகிருப்பதென்னையா

ஆரணனிந்திரன்யாவரும்போற்றிய
அஷ்டாட்சரமுள்ள மந்த்ரா-வெற்றி
வாரணந்தன்னை மடுவினில்ரட்சித்த
வல்லவனேமாய சுந்தரா
காரணமாகவே ஆலிலைமேற்றுயில்
கபடநாடகமுன் தந்தரா அறி
நாரணனேயுந்தன் திருவடியேகதி
நான்பணிந்தேனராமசந்தரா எத்தனை

### பதம்-இ-ம்-இரேகுபதி

பல்லவி

ஐயனே ஸ்ரீராமா இந்த அவதிப்படலாமா

அநுபல்லவி

தெய்வமென்றுனை மெய்யாநம்பி நான் தியங்கித்திரியலாமா

சரணங்கள்

௧ எண்ணுவெண்ணமெல்லா
மெண்ணிப்பொய்யாய்ப்போனேனையா-நடை ஐய
௨ கண்ணுற்பாராய்ப்பெண்ணைக்
கல்லைக்கண்டாய்வழிவிந்பொய்யோ ஐய
௩ வஞ்சகம்சூதுடன்மோசம்நெஞ்சினில் வைத்தோம்அந்தப்
பஞ்சபாவியர்நேசம் மஞ்சினேன்போதும் ஐய
௪ சேதியெல்லாநீயறிவாய் நீதிவரம்புரிவாய்ஞானச்
சோதியுந்தானேயெனக் காதியுந்தானே ஐய
௫ தேசத்தோர்பயமொழிக்க வாசத்தாற்தசரதற்கு
இராஜராமாவென்ன வந்தகோசலைபுத்திரனே ஐய
௬ தப்பிதஞ்செய்தாலுமுனை யெப்படிவைதாலுமெனை
இப்பிறவிதீர்த்துன்தாசர் பொற்பதஞ்சேர்த்தாள்வாய் ஐய

### பதம்-இ-ம்-புன்னுகவராளி

பல்லவி

அடிமைநானுன்னை விடேன்-திருவடி
யல்லால்வேறொன்றுந்தொடேன்

அநுபல்லவி

மடுவிற்கஜேந்தரனை மாளாமலுயிர்க்காத்த
நெடுமாலேயுந்தன்பாத நிழலிலன்புசேர்த்து

சரணங்கள்

௧ ஆசைவலையைய வீசியே-யென்மார்பில்

பாஷைபலவும்பேசியே வாழ்க்கையாய்
யழித்துமிகவுமேசியே
நேசித்துன்பாதத்தைநித்தியம்பத்தியாய்
பூசித்தேனுணவப் பொறிவேரறுத்திட(அடி)

௨ அஷ்டாட்சரத்தோனே யென்னை
ஆளுந்தயாபரனே
பட்டாபிராமராமனே ஏழையான
பங்கிற்றீனதயாளனே
திட்டாந்திறமாகத் தீவினைவயந்தனே
கிட்டாதபடியுந்தன் கிருபையேநான்பெ(அடி)

௩ தேவர்கமயர்தீர வயோத்தியிற்
செங்கோல்வளங்கூற
மூவுலகுஞ்சோர தசரதன்
மூத்தவிழிசோர
ராவணுதியராம்
ஆவியழித்தெந்த னன்னையைமீட்ட(அடி)

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

தாருந்தாருமையா திருவடி-தாருந்தாருமையா

அநுபல்லவி.

பூருவம்ராக்கதர் புன்கணகற்றலந்த
புஜபலவீரனே-தசரதராமனே. (தாரு)

சரணங்கள்.

௧ மாயவஞ்சியர்வலையிற்சிக் காமலே
வம்பரிடஞ்சென்றுவாய்புதைக் காமலே
காயம்வந்திமிகப்பாதவிக் காமலே
கனவிலுன்மந்திரந்தனைமறக் காமலே (தாரு)

௨ நித்தியபதத்தைநான்கை விடாமலே
பசியென்போர்முகத்தைப்பார்த்துண் ணுமலே
இத்தரையிலென்னைத்துயர்தொட ராமலே
இந்தசனனமினிமேலும் எடாமலே (தாரு)

௩ வல்லிருளனயவெல்வினை தீர்க்கவும்
மகிழ்வாய்கருடனேறிவரவெதிர் பார்க்கவும்
சொல்லுந்தமிழ்த்துதியின்பிழைகளைப் போர்க்கவும்
சுகமாவென்றனையுன்றிருவடி சேர்க்கவும்(தாரு)

### பதம்-இ-ம்-பைரவி.

பல்லவி.

இதுவாகிலுஞ்சொல்லுவாயே-சும்மா
யிருக்காதேபெருக்கானநீரே

அநுபல்லவி.

மதுசூதனனாகிய மாயன்கோபாலனை
நித்தமுந்துதிசெய்து நீகதிபெறவே (இது)

சரணங்கள்.

௧ தெருவிலுள்ளகோயிலைதேடிராம்ரு மென்றும்
திருவிளக்கினெய்யைவிட்டோராம்ரு மென்றும்(இது)
மருவெடுத்துன்பதஞ்சூடிராம்ரு மென்றும்
வசனம்பசைகளிபாடிராம்ரு மென்றும்(இது)

௨ ஞானம்பொருளிவர்சேர்க்கிறாரா மென்றும்
நம்பினபேர்களைக்காற்கிறாரா மென்றும்
ஊனங்களானதைத்தீர்க்கிறாரா மென்றும்
உத்தமச்சரியம்பார்க்கிறாரா மென்றும் இது

௩ பிள்ளைக்குப்பாலைபுகட்டுகிறாரா மென்றும்
பூரணச்சந்திரனைகாட்டுகிறாரா மென்றும்
வெள்ளிஎழுத்தாணிநீட்டுறாரா மென்றும்
வெளிகதவங்களைப்பூட்டுறாரா மென்றும் இது

### பதம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி

மறவாதேநீமனமே-ராமமந்திரம்-மறவாதே-நீமனமே.

அநுபல்லவி.

மறவாதேநீமனமே-யான்றிருபதத்தை
யிரவிம்பகலானுமிறைஞ்சத்தருஞ்சகத்தை. மற

சரணங்கள்.

௧ யானையிரதமேறி யம்புவியாண்டாளும்
சேனைகாவலுருச் சேவித்துநின்றாலும்
தானதருமங்களைத் தவறாமல்செய்தாலும்
ஞானபோதங்களை நதம்பெறவுரைத்தாலும் மற

௨ உன்னைக்கெடுக்கநிந்தை யுரைத்துமுடியிட்டாலும்
அன்னைதந்தையர்சுக யாவுமடிந்திட்டாலும்
கன்னமிட்டுக்கொள்ளை கள்ளரடித்தாலும்
வின்னமாய்தேகத்தில் வேதனைவிளைந்திட்டாலும் மற

௩ வாதாடித்தீதாக வழக்குக்கிழுத்தாலும்
வேதாகமங்களை